www.tamilarangam.net

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

# சுவடுகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* உங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை ஒரே இடத்தில் வாங்கவும்,

* நகரின் மத்தியிலேயே உங்கள் பொருட் கொள்வனவைச் செய்து முடிக்கவும்,

* உங்கள் உணவுச் செலவையும், சிரமத்தையும் பெருமளவில் குறைக்கவும்



* நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் தபால் மூலம் உங்களுக்குத் தேவையான பொருட்களை உடன் அனுப்பிவைக்கிறோம். தொலைபேசி மூலமோ, கடித மூலமோ எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். மிகுதியை நாங்கள் செய்கிறோம்.

INTER TRADERS

STENERS GATE 18

( OSLO CITY பின்புறம்)

0184 0184 OSLO 1

தொலைபேசி இலக்கம்: 02/ 176218

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வின்சென்ற் வான்கோ

அபிமன்யு



1887, அம்ஸ்ரடாம்

தான் வாழ்ந்த காலத்தில் ஓவியராக பெரிதளவில் மதிக்கப் படாமல், இளம் வயதிலேயே வாழ்வைத் துறந்து, பிற்காலத்தில் உலகத்தின் சிறந்த ஓவியர்களில் ஒருவராக மதிக்கப்பட்ட வின்சென்ற வான்கோ மறைந்து நூறு வருடங்கள் நிறைவாகி விட்டன.

ஏற்கனவே இருந்த ஓவியப் பாணிகளில் இருந்து வேறுபட்டு வெளிக் காட்சிகளைத் தன்னுள் வாங்கி, கலாரீதியாக அவற்றை ஓவியமாக்கும் எக்ஸ்பிரஷனிஸம் **(Expressionism)** என்ற ஓவியப் பாணியை உருவாக்குவதில் முன்னின்றவர் இவர். புறக் காட்சிகளை அப்படியே வரையாமல் இம்முறையில் வரைவதால் புற உருவத்தைவிட உணர்வுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டது. மன உணர்வுகளை அப்படியே வெளிக்காட்டும் அவரது எண்ணற்ற 'சுய பிரதிமைப் படங்கள்' **(Self Portraits)** இதற்குச் சான்றுபகர்கின்றன.

1857ல் நெதர்லாந்தின் எல்லைக் கிராமமான குருட்சண்டட்டில் மதகுரு ஒருவருக்கு முதல் மகனுகப் பிறந்தார் வான்கோ. இவருக்குப் பின் ஐந்து குழந்தைகள் பிறந்தன. பதினுறு வயதில் ஓவியம் பயின்ற வான்கோ, மதகுருவாகவும் பயிற்றப்பட்ட போதும் அவரால் அதிலும் நிலைகொள்ள முடியவில்லை. சிறிது காலம் புத்தகக் கடையிலும், ஆசிரியப் பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வான்கோவால் எந்தத் தொழிலிலும் நிலைத்து நிற்க முடியவில்லை. பெல்ஜியத்தில் வறிய கிராமப் பகுதி ஒன்றில் மதகுருவாக இருந்தபோது நிலக்கரிச் சுரங்கத்



1889, பாரிஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர்களின் முகங்களை ஓவியமாக்கிஞர். இயற்கைத் தோற்றங்களையும் அழகான பொருட்களையும் மாத்திரமே வரைந்த அவரது முன்னேடிகளில் இருந்து இந்தப் படங்கள் அவரை வேறுபடுத்தின. பிரான்சில் வாழ்ந்த காலத்தில் அங்கிருந்த ஓவியர்களான மில்லற், கோருட் ஆகியோரின் படைப்புகள் வான்கோவைக் கவர்ந்தன. ஜப்பானிய ஓவியங்களிலும் அவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

லண்டனில் வாழ்ந்த காலத்தில் வான்கோ தன்னைப் பெரிதும் ஊக்குவித்தவரும் மருத்துவருமான (G)காச்சே என்பவரின் மகளை நேசித்தார். அவரது விருப்பம் கைகூடவில்லை. பின்பும் வேறு இரு சந்தர்ப்பங்களில் அவரது அன்பு நிராகரிக்கப் பட்டமை அவரது வாழ்வில் விரக்தியை ஏற்படுத்தியது. நிரந்தரமாக எந்தத் தொழிலிலும் நிலைகொள்ளாததால் வறுமையும் அவரைப் பலதடவை வாட்டியிருக்கிறது. அவ்வேளைகளில் எல்லாம் அவரது தம்பி தியோ, பெரும் உதவிகள் புரிந்திருக்கிருர். வான்கோ தனது உணர்வுகளை தம்பி தியோவுக்கு கடிதங்களாக எழுதியிருக்கிருர். இக்கடிதங்களும் வான்கோவால் வேறு நண்பர்களுக்கு எழுதப்பட்ட கடிதங்களும் வான்கோவின் இலக்கியப் பங்களிப்பாக மதிக்கப்படுகின்றன.

வாழ்வில் பெரும் சோகங்களைச் சுமந்த வான்கோ பிற்காலத்தில் விரக்தி அடைந்திருந்தார். இக்காலப் பகுதியில் அவர் வரைந்த ஓவியங்கள் தலைசிறந்ததாக மதிக்கப் படுகின்றன. இக்காலப் பகுதியில் அவர் பெருமளவில் தன்னைத்தானே வரைந்தார். 1886ல் வரையப்பட்ட கறுப்பு வெள்ளைப் படத்தைத் தொடர்ந்து 1887கோடையில் பாரிஸில் அவர் இருந்தபோது வரைந்த வண்ணத்திஞலான 'சுய பிரதிமைப் படங்கள்' ஏராளமானவை. இவற்றில் குறைந்தது முப்பது படங்கள்



1887, அம்ஸ்ரடாம்

தற்போது அம்ஸ்ரடாமிலும் வேறு உலக நகரங்களிலும் ஓவியக் காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ளன. இப்படங்கள் வான்கோ வாழ்வில் அடைந்திருந்த விரக்தியையும் வெறுப்பையும் தெளிவாகக் காட்டுவன எனக் கருதப்படுகின்றன. இப்படங்கள் பற்றி தம்பி லியோவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தன்னைத்தானே வரைவது மிகவும் சிரமமானது எனக் குறிப்பிட்டுள்ளார் வான்கோ. தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்ட வான்கோ தனது 37 வருட வாழ்வில் பத்து வருடங்களை மாத்திரமே ஓவியத்துக்காகச் செலவிட்டார். அவரது வாழ்க்கைக் காலத்தில் அவரது ஓவியம் ஒன்று மாத்திரமே விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. எனினும் அவரது ஓவியங்கள் நூறு வருடத்தின் பின்னரும் சிறப்பாக மதிக்கப்படுகின்றன. இந்த இதழில் வெளியாகும் அவரது 'சுய பிரதிமைப் படங்கள்' (Self portraits) நோர்வேயில் வெளியாகும் 'A magasinet' சஞ்சிகையிலிருந்து நன்றியுடன் பெறப்பட்டவை.

www.tamilarangam.net



# சுவடுகள்

நூறு வருடங்களுக்கு மேலாக இந்த மேதினமும் பெரிதாக எந்த மாற்றமும் இல்லாமல் வந்துபோய்விட்டது. சாதி, மத, இன, நிற பேதமற்று எல்லோரும் கொண்டாடக்கூடிய திருவிழாவாக மேதினம் இப்போது ஆகிவருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை துப்பாக்கிகளால் தொழிலாளர்களைக் கொல்வோரும், வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைக்கூட தொழிலாளர்களிடம் விட்டுவைக்காதவர்களும், பல்தேசிய நிறுவனங்களுக்கு உள்ளூர்த் தொழிலாளர்களைத் தாரை வார்ப்போரும், சுரண்டலைத் தேசிய கொள்கையாக மாற்ற விரும்புவோரும் ஒன்றுபட்டு கொண்டாட வாய்ப்பானது மேதினம் மாத்திரமே.

தமிழ்த் தொழிலாளர்களும் சரி, சிங்களத் தொழிலாளர்களும் சரி கடந்த காலங்களில் பாராளுமன்ற அரசியல் கட்சிகளின் இனவாதத்துக்குப் பலியானது ஒருபுறமிருக்க, மேதினங்களில் அரசியற் கட்சிகளின் பலத்தை நிரூபிக்க 'கோலாகலமான' ஊர்வலம் போவதே வழமை. இதற்காக மக்களின் வரிப்பணத்திலும், கறுப்புப் பணத்திலும் வாங்கப்பட்ட சாராயப் போத்தல்கள், உணவுப் பொதிகள், போக்குவரத்து எனப் பெரும் பணம் விரயமாக்கப்படுவது இலங்கையின் அரசியற் பாரம்பரியம்.

மேதினத்தன்று கோலாகல ஊர்வலம் போகிற தொழிலாளர்கள் தாங்கள் மறுபடியும் வீதியிலேயே வீசப்படுவதை உணர முடியாதவாறு சூழல் நச்சுக் கலாசாரத்தால் போதை ஏற்றப்பட்டிருக்கிறது. தேயிலைத் தோட்டங்களிலும், சுதந்திர வர்த்தக வலயத்திலும் மிக மோசமான சுரண்டல் எதுவித தடங்கலும் இல்லாமல் நிகழ்ந்து வருகிறது. இத் தொழிலாளர்களைத் தொழிற்சங்க ரீதியில் அணிதிரட்டிய அரசியற் கட்சிகள் தமது அரசியல் லாபத்துக்கே அவர்களைப் பயன்படுத்துகின்றன. ஏனைய தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களை அரசியல் ரீதியாக அவர்களை அணிதிரட்டி அவர்களின் விடுதலைக்குப் போராட வைப்பதற்குப் பதிலாக சம்பள உயர்வுப் போராட்டத்துடன் மட்டுமே நின்றுவிடுகின்றன.

www.tamilarangam.net



இலங்கையில் உள்ள சகல தொழிலாளர்களும் தரகு முதலாளித்துவ அரசின் பொறுப்பற்ற பொருளாதார அரசியற் கொள்கைகளால் ஒடுக்கப்படும் அதேவேளை தமிழ்பேசும் தொழிலாளர்கள் மேலதிகமாக இன ஒடுக்குமுறையையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கை ராணுவமும் சரி, இந்திய ராணுவமும் சரி, பல விடுதலை இயக்கங்களும் சரி உழைக்கும் மக்களின் விடுதலைக்காக பாடுபடுவோரைத் தேடி அழிப்பதில் முனைப்புடன் ஈடுபட்டமை, இவர்களின் நலன்களையும் நோக்கங்களையும் தோலுரித்துக் காட்டுகிறது.

தலைமுறை தலைமுறையாக தேயிலைத் தோட்டங்களை உருவாக்கி இலங்கையின் முதுகை நிமிர்த்திய மலையகத் தொழிலாளர்கள் ஒருலட்சம் பேர் பலவந்தமாக இந்தியாவுக்கு அனுப்பப்படும் அபாயம், இலங்கை இந்திய அரசுகளின் ஒப்பந்தத்தால் ஏற்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டங்களில் தற்போது அமுலாகும் காணிப் பகிர்வு ஏராளம் தொழிலாளர்கள் தமது தொழிலையும், வாழிடத்தையும் இழக்கும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் வாழிடங்களான வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் எல்லைப் பகுதிகள் குடியேற்றங்கள் மூலம் சூறையாடப்படுவது ஒருபுறமிருக்க மன்னார்ப் பகுதியில் நெல்வயல்களின் நீர்ப்பாசனத்துக்கு உதவும் மல்வத்து ஓயாவைத் திசைதிருப்ப அரசு திட்டமிட்டுள்ளது. இவை அரசின் இன ஒடுக்குமுறை அம்சங்களும், வர்க்க ஒடுக்குமுறை அம்சங்களுமாகும்.

வல்லரசுகளிடையே இணக்கம் ஏற்பட்டுவரும் புதிய சூழலானது மூன்றும் உலக நாடுகளின் அபிவிருத்தி உதவிகளைப் பாதிப்பதோடு, சுரண்டல் தளங்களை ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் பங்குபோட வழிவகுத்துள்ளன. ஏற்கனவே மூன்றும் உலக நாடுகளில் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தமக்குச் சாதகமாக்குவதில் வல்லரசுகள் முனைந்து வருகின்றன. இப்போதைய சூழல் போராட்டத்துக்கு பாதகமான நிலையையே தோற்றுவிக்கும்.

சுரண்டல், ஒடுக்குமுறை என்ற தளைகளில் இருந்து தம்மை விடுவிக்க, தொழிலாளிகள் குறுகிய நோக்கங்களில் பலியாகாது தம்மைப் பாதுகாப்பதோடு தம்மை ஓரணியாகத் திரட்டிப் போராட்டத்தைத் தமது தலைமையில் நடத்தவேண்டும்.

எல்லோரும் எல்லா உரிமைகளும் பெறும் நிலை உருவாக்கப்படும்வரை மேதினம் என்பது தவறான நோக்கத்தில் பயன்படுவது தவிர்க்க முடியாதது. உண்மையான அர்த்தத்தில் உழைக்கும் மக்களின் விடுதலையை உறுதிசெய்யும் மேதினத்தை நோக்கி அனைவரும் அணிதிரள்வோம்.

சுவடுகள் 18,
சித்திரை வைகாசி 1990

சுவடுகள்

www.tamilarangam.net





## நிறவாதத் தாக்குதல்.

23.04.90 அன்று ஃபெவிக் எனும் இடத்திலே FMIஇன் வருடாந்த பொதுக் கூட்டத்துக்கு எதிராக கிறிஸ்ரியான்சான்ட் எனும் இடத்திலிருந்து அமைதியான முறையிலே எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்த பஸ்வண்டி ஒன்றிலே வந்த ஏறத்தாழ 40-50 பேர் வரையிலான நிறவாத எதிர்ப்பு அமைப்பு உறுப்பினர்கள் ஆண மிர்டாலினுலும் அவாது கையாட்கள் 20பேராலும் மோசமான முறையிலே தாக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸிலிருந்து இறங்கிய நிறவாத எதிர்ப்பு அமைப்பு உறுப்பினர்களை ஆண மிர்டால் பெரிய தடியால் சுழற்றிச் சுழற்றி அடித்தாராம்.

FMIஇன் வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறும் சுற்ருடலிலே பொலிசார் விழிப்பு நிலையில் இருந்தும் இந்த காட்டுமிராண்டிச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று. தாக்குதலை FMI ஆதரவாளர்களே தொடக்கினர் என ஆரண்டால் பொலீஸ் பொறுப்பதிகாரி ஸ்ரெய் கொப் தெரிவித்துள்ளார். இத்தாக்குதல் சம்பவமானது சென்ற வருடமும் இடம்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தமது பாதுகாப்பு நடவடிக்கைகள் FMIஇன் கூட்டம் நடைபெறும் இடத்தை சுற்றியிருந்தும் இந்த தாக்குதலைத் தடுத்து நிறுத்த முடியவில்லையென பொலீஸ் பொறுப்பதிகாரி கவலை தெரிவித்துள்ளார். இத் தாக்குதல் சம்பவத்தின்போது 5 நிறவாத எதிர்ப்பமைப்பு உறுப்பினர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர். நிறவாத எதிர்ப்பமைப்பு உறுப்பினர்கள் பஸ்ஸைவிட்டு இறங்க முன்பே இத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாம். 40-50பேர் கொண்ட நிறவாத எதிர்ப்பமைப்புக் குழுவிலே இளைய தலைமுறையினரே அதிகமாவர். இவர்களுள் பெண்களது எண்ணிக்கையே அதிகம் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

கிறிஸ்ரியான்ஸான்ட் நிறவாத எதிர்ப்பமைப்பைச் சேர்ந்த அஸ்திரி ஒல்சன் அவர்கள் இத் தாக்குதலை மேற்கொண்டோரை "நாசகாரக் குழு" (rÄtt party) என வர்ணிக்கின்ருர். நாம் FMI இனரின் பொதுக் கூட்டத்தை எதிர்த்துத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ள செல்லவில்லை, மாருக அவர்களது நடவடிக்கையை ஆட்சேபிக்கும் விதத்திலே எமது எதிர்ப்பைக் காட்டச் சென்ருேம். ஆனுல் அவர்கள் எம்மைத் தாக்கி விட்டனர் என்ற அஸ்திறீட், ஆண மிர்டால் இத் தாக்குதல் குழுவினரின் தலைவனுக செயற்பட்டார் என்று கூறுகிருர்.

தாம் நடாத்திய தாக்குதலால் யாரும் காயமுறவில்லையென ஆண மிர்டால் தெரிவித்துள்ளார். தாக்குதலை மேற்கொண்ட இளைஞர்கள் செய்த நல்ல காரியத்தால் ஆர்ப்பாட்டக் காரர்களால் எமது கூட்டத்தைக் குழப்பவோ எதிர்க்கவோ இயலவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆண மிர்டாலைத் தேடி பொலிசார் வலை விரித்துள்ள போதும் அவர் இன்னும் அகப்படவில்லை என செய்திகள் தெரிவிக்கின்றன. தான் இன்னும் சில தினங்களுள் பொலிசாரிடம் சரணடைவேன் என ஆண மிர்டால் தன் மறைவிடத்திலிருந்து ஆப்தன்பூஸ்தன் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். ஆண மிர்டாலைத் தேடி அக்டர் தொகுதியிலும்

www.tamilarangam.net



ரெலிமார்க் தொகுதியிலும் பொலிசார் தீவிர தேடுதலை மேற்கொள்ளும் அதேசமயம், ஆரண்டால் பொலீஸ் நிலைய ஜெனரல் ஷெல் போயே தமது செய்தியிலே ஆண மிர்டால் இவ்வளவு பெரிய பொலீஸ் தேடுதலிலிருந்து தப்ப முடியாது என்று தெரிவித்துள்ளார்.

ஆண மிர்டாலுக்கு நோர்வேஜிய சட்டவிதி 136, 228, 229, 232 படி 3வருடகால சிறைத் தண்டனை கிடைக்கலாம் என கருதப்படுகிறது.

இத் தாக்குதல் சம்பவத்தை வெறும் நிகழ்வாக நாம் கருதிவிட முடியாது. அமைதியான முறையிலே தமது எதிர்ப்பைத் தெரிவிக்கச் சென்றவர்கள் காட்டுமிராண்டித் தனமான முறையிலே தாக்கப் பட்டுள்ளனர். ஜனநாயகத்தை இழந்த நிலையிலே நடைபெறும் இத்தகைய காட்டுமிராண்டித் தனமான செயல்களை நாம் வலுவாக எதிர்க்க வேண்டும். வெளி நாட்டவர்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நிகழ்த்தச் சென்ற நிறவாத எதிர்ப்பமைப்பைச் சார்ந்த நோர்வீஜிய நண்பர்களுக்கு நாம் நன்றி செலுத்தும் அதேவேளை அவர்களுக்கு ஏற்பட்ட துயரத்தில் நாமும் பங்கேற்க வேண்டும். நிறவாத எதிர்ப்பமைப்பானது வெளிநாட்டவர்கள் நோர்வேயிலே எதிர்நோக்கும் நிறவாத நடவடிக்கைகளை எதிர்க்கும் அமைப்பாகவே செயற்படுகிறது. இந்த அமைப்பிலே வெளிநாட்டவர்கள் உட்பட பெரும்பாலும் நோர்வேஜிய இளைய சமூகத்தினரே அங்கம் வகிக்கின்றனர். இவர்கள் செய்யும் வேலைகளில் நாம் ஏதாவது பங்கேற்கின்றோமா என்று நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். ஆண மிர்டால் போன்ற துவேசிகளும் FMI போன்ற அமைப்புகளும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ள இருக்கும் பாரதூரமான எதிர்விளைவுகளை எமது அனுதாபிகளான நிறவாத எதிர்ப்பமைப்பு, SOS போன்ற அமைப்புகள் மட்டும் எதிர்த்தால் போதாது, நாமும் அதில் நேரடியாகப் பங்கேற்க வேண்டும்.●


## சோக நாடகங்கள்

காலையும் மாலையும்
கழிந்தன மாற்றமின்றி
பனிக்காலம் என்றனர்
பகலுடன் இரவின்றி
கழிந்தன நாட்கள்
கோடை என்றனர்
காற்றுடன் மழையின்
கைகலப்பை
இலையுதிர்காலம் என்றனர்

எப்போது வந்தாய்
என்ற கேள்விக்கு
கழிந்த இலையுதிர்காலங்களை
கணக்கிட்டு கூறியபோது
வாய்மூடி
மௌனியாக
தொடரவிரும்பாமலே.....
சம்பாஷணைகள்
சடுதியாக
முறிவடைந்தாலும்
வெளியேறு என்பதை
மட்டும்
வெளிக்காட்டும்
அந்த
வெளிர்நீல விழிகள்.
இதுதான் பலர்
கனவுகாணும்
சொர்க்கபுரி வீதிகளில்
நாளும் அரங்கேறும்
சோக நாடகங்கள்

● சுபத்தி

www.tamilarangam.net



# ஆர்ப்பாட்டம்

- ஊர்சுற்றி -

கடந்த 10ஆந் திகதி பலநூறுபேர் ஒஸ்லோ விமான நிலையத்தில் அரசியற் தஞ்சங்கோரும் அலுவலகத்துக்கு முன்ஞல் மறியற் போராட்டத்தை மேற்கொண்டனர். அரச பாரபட்சத்துக்கு (நிறவாதம்) எதிரான அமைப்பென தம்மைக் கூறிக் கொண்டவர்களாலேயே இது நிகழ்த்தப்பட்டது. இதில் குர்திஷ்ட், சிலி, ஈரான் அரசியற் தஞ்சம் கோருவோர் அமைப்புடன் சேர்ந்து 'பிலிப்ஸ்' அமைப்பும் பங்கேற்றது.

இவர்கள் புதிய அரசியற் தஞ்சங்கோரும் விதிமுறைகளை எதிர்த்தே ஆர்ப்பாட்டம் நடாத்தினர். நோர்வேயில் அரசியற் தஞ்சங் கோருவோர் அவர்கள் முன்னர் தரித்துவந்த நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்படக்கூடிய விதிமுறைகளுக்கமைய கடந்த இரண்டு வருடங்களாக பலர் திருப்பியனுப்பப் பட்டுள்ளனர். இவை சிலவேளை ஆபத்துங்கூட. இவ்வாறு இவ்வமைப்பின் பேச்சாளர் ஒருவர் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் "அண்மையில் 16 ஈரானியர்கள் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்; 3பேர் காணுமல் போயுள்ளனர். இவர்கள் அரசியல் தஞ்சக் கோரிக்கை மனு முறையாக பரிசீலிக்கப்பட முன்னர் அனுப்பப்படுவதாகவும், இவை 24மணி நேரத்தில் பரிசீலிக்கப்பட்டு, சட்டத்தரணிகள் உதவியின்றி முடிக்கப்படுவதாகவும் கூறிஞர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோர்வே தமிழ்ச் சங்கம்

**Tamil Sangam I Norge**

P.O. Box 88 Romsaas; 0907 OSLO-9

Bankgiro
5017.10.31254

சுவடுகள் ஆசிரியர் அவர்கட்கு,

தாங்கள் வெளியிட்ட பங்குனி 90ம் ஆண்டு சுவடியின் முதற்பக்கத்தில் நோர்வே நாட்டை-விட்டு அனுப்ப அரசால் முடிவெடுக்கப்பட்ட சண்முகன் நாகே-ந்திரனுக்கு தமிழ் ரொனிக் கபேயுடன் இணைந்து நீங்கள் வழங்கிய ஆதரவுபற்றிய கட்டுரைக்கு அகதி என்று பெயரிட்டு வெளியிட்டு தமிழ்ச்சங்கத்தின மட்டுமல்ல ஏனையோர் வாழ் பல தமிழர்களையும் கொதிப்பிற்குள்ளாக்கியதுடன், உங்களுக்கு இக் கடிதத்தையும் எழுதத் தூண்டியது. ஒரு தனிநபரையோ அல்லது வேறுசங்கங்களையோ கண்டிக்கும் அதிகாரம் யாருக்கும் இல்லை. தமிழ்ச்சங்கம் சண்முகன் நாகேந்திரனுக்கு வழங்கிய ஆதரவு பாராளுமன்றம் வரை சென்றுள்ளது என்பதை தாங்-கள்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அதற்கான ஆதாரத்தை இத்துடன் இணைத்து அனுப்புகிறோம். இது பற்றிய விளக்கத்தை 31.3.90 இல் நடைபெற்ற தமிழ்ச்சங்க கூட்ட-த்திற்கு சமூகமளித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுடன் எமது அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளது

இதை அகதி என்ற பெயரில் மொட்டைக் கடிதமாக அனுப்பப்பட்டதைத்தான், பார்வையிட்ட ஆசிரியர் இதை பிரசுரிக்க அனுமதி வழங்கியது வியப்பு. இது போன்ற சம்பவங்களை பிரசுரித்து தமிழ்மக்களை குழப்பாது இருக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். சரியான விளக்கத்துடன் அனு-ப்பும் இக்கடிதத்தையும் அத்தாட்சிப்பிரதியையும் அடுத்த இதழில் பிரசுரிக்-குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

செயலாளர்
இ.ந. [illegible]

www.tamilarangam.net



உ

N. KANNAN,
LØESHAGAVN - 49,
1456 NESODDGØDA.
19-04-1990.

THAMIL SANKAM I NORGE,
POST BBOX - 88,
ROMSØ - 0907,
OSLO - 9.

நோர்வேயில் இருக்கும் தமிழ்ச் சங்கத்திற்கு எழுதிக் கொள்வது, எனது பிரச்சினையில் உங்களுடைய சிரமத்தைப் பாராது எனக்கு உதவி செய்ததற்கு முதற் கண் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு தடவை தொலைபேசியில் கதைத்து எனது பிரச்சினையை தீர்க்கவில்லை பல தடவை பலருடன் எனக்காக கதைத்திருக்கிறீர்கள். அது மட்டுமின்றி சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கடிதத்துடனும் நேர்முகமாகவும் எனது பிரச்சினையை விபரமாக எடுத்து சொல்லி இருக்கிறீர்கள். எனது பிரச்சினையை உங்களது பிரச்சினையாக எடுத்து செயற்பட்டீர்கள். அதற்கு மிகவும் நன்றியை தமிழ்ச் சங்கத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு

எப்போதும் நன்றி சொல்ல கடமைப்பட்ட

நா. கண்ணன்

கண்ணன் நாகேந்திரம் என்ற தமிழ்ச் சிறுவன் திருப்பி அனுப்பப்படுவது தொடர்பாக கடைசியாக வெளிவந்த சுவடுகள் (பங்குனி) இதழில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கம் ஒன்று தொடர்பாக தமிழ்ச்சங்கம் சுவடுகளுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது. இக்கடிதத்தில், குறிப்பிட்ட ஆக்கம் ஒஸ்லோ தமிழர்களையும் தமிழ்ச் சங்கத்தையும் குழப்புவதாகவும், வேறுசில விடயங்களையும் சங்கம் குறிப்பிட்டு எழுதியுள்ளது.

தமிழ்ச்சங்கம் எமக்கனுப்பிய திகதியிடப்படாத கடிதத்தையும் கண்ணனால் தமிழ்ச் சங்கத்துக்கு 19.04.90இல் அனுப்பப்பட்ட கடிதத்தையும், கண்ணனால் சுவடுகளுக்கு அனுப்பப்பட்ட 01.05.90 திகதியிடப்பட்ட கடிதத்தையும் முழுமையாகப் பிரசுரிக்கிறோம். வாசகர்கள், கடிதங்கள் மூலம் பிரச்சனையைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியும் என நம்புகிறோம்.

www.tamilarangam.net



N. KANNAN
LØESHAGAVN-49,
1456 NESODDGADA.
01-05-1990.

அன்புடன் சுவடிகள் ஆசிரியர் குழுவிற்கு,

கண்ணன் நாகேந்திரம் ஆகிய நான் எழுதிக் கொள்வது ~~ஏ~~ என்னுடைய பிரச்சினைகள் தொடர்பாக மார்ச் மாதம் சுவடிகள் சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரை தொடர்பாக, சுவடிகள் சஞ்சிகை ஆசிரியர் குழுவிற்கும் தமிழர் சங்கத்திற்கும் இடையில் எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பாக எனது சரியான விளக்கத்தை கொடுக்க முன்வருகிறேன்.

~~தமிழ்~~ சுவடிகள் ஆசிரியர் குழு என்னுடன் தொடர்பு கொண்டு என்னுடைய பிரச்சினையில் யாராவது உதவி செய்தார்களா? என்று கேட்ட போது நான் இல்லை என்றே பதில் அளித்தேன். காரணம் அவர்கள் என்னிடம் கேள்வியை கேட்ட போது நான் முதலாவது தடவையும் இரண்டாவது தடவையும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது ஒருவரும் எனக்கு உதவி செய்ய வில்லை என்ற நோக்கிலே இல்லை என்றே பதில் அளித்தேன். காரணம் நான் கேள்வியை தவறாக விளங்கிக் கொண்டதே. எனினும் நான் மூன்றாம் தடவை விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட போது தமிழர் சங்கமும் தமிழ் சோலை இதழை நடத்தும் என்னுடன் தொடர்பு கொண்டு எனது பிரச்சினை தொடர்பாக பலருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து வந்ததாக தெரிவித்தனர். மேலும் எனது பொறுப்பாளர் ~~எனது~~ பொறுப்பாளர் என்னுடன் தொடர்பு கொண்ட பொழுது நோர்வேயில் இயங்கும் இரண்டு தமிழ் அமைப்புகள் எனக்கு உதவி வழங்கி உள்ளதாக கூறினார்.

என்னுடைய பிரச்சினைகள் தொடர்பாக சுவடிகள் சஞ்சிகையில் கட்டுரை வெளியிட்டு எனக்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்வதுடன் இப்பிரச்சினை தொடர்பாக சுவடிகள் ஆசிரியர் குழுவிற்கும் தமிழர் சங்கத்திற்கும் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளுக்கு எனது தவறான புரிந்துணர்வே காரணம் என்பதை தெரிவித்துக் கொள்வதுடன் இது தொடர்பாக சுவடிகள் சஞ்சிகை ஆசிரியர் குழுவிற்கு ஏற்பட்ட ~~மனக்கசப்பிற்கு~~ சிரமத்திற்கு நான் மிகவும் மனம் வருந்துகிறேன்.

இப்படிக்கு, உண்மையுள்ள
கண்ணன் நாகேந்திரம்.

www.tamilarangam.net



# சில விளக்கங்கள்

சில விளக்கங்கள்

இப் பிரச்சனை தொடர்பாக சில விடயங்கள்பற்றி சுவடுகள் விளக்கமளிக்க வேண்டியுள்ளது.

1. குறிப்பிட்ட ஆக்கத்துக்கு அகதி என்று புனைபெயர் இடப்பட்டிருந்தது. இதை மொட்டைக் கடிதமென நினைப்பது தவறானது. புனைபெயரில் ஆக்கங்களை எழுதுவதும், அவற்றைப் பத்திரிகைகள் பிரசுரிப்பதும் வழமைக்கு மாறானதல்ல. பத்திரிகா தர்மப்படி புனைபெயரில் எழுதுவோரின் முகவரியைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. மொட்டைக் கடிதங்கள் ஒருபோதும் சுவடுகளில் பிரசுரமாக மாட்டா.

2. யாரையாவது குழப்பவேண்டும் என்ற நோக்கில் அக்கட்டுரை எழுதப்படவோ, பிரசுரிக்கப் படவோ இல்லை. கண்ணனிடம் தொடர்பு கொண்டு பெற்ற தகவலின் அடிப்படையிலேயே அது எழுதப்பட்டது. (கண்ணனின் கடிதம்)

3. தாயகத்தைப் பிரிந்து வாழும் நாம் அனைவரும் ஒற்றுமையாகவும் ஒருவர் நலனில் மற்றவர் அக்கறை எடுத்தும் இருப்பது அவசியம் என்ற கருத்தே அக்கட்டுரையில் வலியுறுத்தப் பட்டிருந்தது. தமிழ்ச் சங்கத்தையோ வேறு தனிநபர்களையோ குற்றஞ் சாட்டும் நோக்கம் அதனை எழுதியவருக்கோ பிரசுரித்த சுவடுகளுக்கோ இல்லை. தவிரவும் இப்பிரச்சனையில் யார் அக்கறை எடுத்தாலும் அவர்களைப் பாராட்ட வேண்டும். தமிழ்ச் சங்கம் கண்ணனுக்கு உதவியது உண்மையில் மகிழ்ச்சி தருகிறது. இங்குள்ள எம்மவரிடையே தவறான புரிந்து கொள்ளல்களை தவிர்க்க வேண்டுகிறோம்.

கடைசியாக ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகிறோம். 'ஒரு தனிநபரையோ, அல்லது வேறு சங்கங்களையோ கண்டிக்கும் அதிகாரம் யாருக்குமில்லை' இவ்வாறு தமிழ்ச் சங்கம் எழுதுதியுள்ளதானது முற்றிலும் ஜனநாயக விரோதமாகும். உலகிலுள்ள எவருக்கும் தமது கருத்தை வெளியிடுவதற்கு சுதந்திரம், உரிமை உள்ளது. இதையே கருத்துச் சுதந்திரம் என்கிறோம். எமது போராட்டத்தில் இதுவும் வெல்லப்பட வேண்டிய ஒரு அம்சமே. உலகில் நடக்கும் அநீதிகளையும் அதிகார துஷ்பிரயோகங்களையும் வெளிக் கொணர்வதில் பத்திரிகைகள் பெரும் பங்கு வகித்துள்ளன.

கருத்துச் சுதந்திரத்தை மறுப்பது போன்ற இவ்வாறான, தமிழ்ச் சங்கத்தின் கூற்று, முழு ஜனநாயக உரிமைகளுக்காக போராடும் தமிழ்பேசும் மக்களுக்கும், ஜனநாயகத்தின்பால் அக்கறை கொண்ட அனைவருக்கும் வேதனை தருவதாகும்.

இந் நிலைப்பாட்டைத் தமிழ்ச் சங்கத்தினர் மீளாய்வு செய்வார்கள் என நம்புகிறோம்.

– சுவடுகள் –

## உறவு

'கண்மூடி' நாடகத்தில்
உறவுக்காட்சி
முடிந்ததும்
வேசங் கலைந்து
மௌனத்தில்
ஒரு நிறைவு
நிறைவில்
ஒரு தளம்பம்!

– தேவதாஸ் –
(மன்னூர்)

## ஜனனம்

உன்
வார்த்தை வாரிசுக்காய்
உன் எண்ணக் கருவை
என்
இதயக் கருப்பையுள்
சுமக்கிறேன்.
நிறை பிரசவம் என்பது
என்னவோ...
சத்துள்ள
உன் விடையில்தான்...

www.tamilarangam.net



மேற்கு ஜேர்மனியின் இலக்கிய முயற்சிகள் தொடர்பாக ஒரு ஜேர்மன் நாட்டவரின் பார்வையை இங்கு பிரசுரிக்கிறோம். ஜேர்மனியில் தமிழ் இலக்கிய ஆர்வலர்களும் பத்திரிகை ஆசிரியர்களும் சந்திக்கும் ஆறுவது இலக்கியச் சந்திப்பு மேற்கு பேர்லினில் நடந்த காலத்தில் (கடந்த வருட இறுதியில்) இக் கட்டுரை எழுதப்பட்டது.

# மேற்கு ஜேர்மனியில் இலக்கிய முயற்சிகள்

# ஒரு ஜேர்மனியரின் பார்வை

மேற்கு ஜேர்மனியில் எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்தே தமிழர்களின் புகலிட இலக்கியங்கள் படைக்கப்பட்டு வருகின்றன. கவிதை, சிறுகதை என்பவற்றோடு சஞ்சிகைகள் பலவும் வெளியிடப் படுகின்றன. இவை யாவும் ஜேர்மனியரின் போதுமான அக்கறைக்கு உட்படுத்தப் படவில்லை, எனினும் இத்தமிழர்களின் வாழ்நிலை நிபந்தனைகள் நாஜிகளின் காலத்தில் ஜேர்மன் மொழி எழுத்தாளர்கள் பலரின் புகலிட வாழ்வை நினைவுக்குக் கொண்டு வருகின்றன .

## கலாசார ஒழிப்பு

ஜேர்மனியில் புகலிட இலக்கியங்கள் என்றவுடன் 1933ல் ஜேர்மனியில் இருந்து தப்பி ஓட வேண்டியிருந்த எழுத்தாளர்களே நினைவுக்கு வருகின்றனர். ஹிட்லரின் 'அதிகாரக் கைப்பற்றல்' வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட பின் இரண்டொரு வாரங்களில் ஜேர்மன் மாணவர் அமைப்பானது ஜேர்மன் அல்லாதோருக்கும், ஜேர்மன் அல்லாத அனைத்துக்கும் எதிரான அழிப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தது. இத்தகைய அழிப்பின் உச்சமாக 1933 மே மாதம் நிகழ்ந்த பகிரங்க புத்தக எரிப்பு நடவடிக்கையைப் பற்றிக் குறிப்பிடலாம். பேர்லினில் ஓபர்ன்பிளாற்ஸ் (Opernplatz) எனும் இடத்தில் மட்டும் 20,000 நூல்கள் இப்படி எரிக்கப்பட்டன.

சுமார் 50,000 பேர்வரை (இவர்களில் எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள், இசையாளர்கள், கலைஞர்கள் அடங்குவர்) ஜேர்மனியை விட்டு வேறு நாடுகளுக்குத் தப்பிச் சென்றனர். ஒரு சிறு ரெலிபோன் எச்சரிக்கை கிடைத்ததுமே அவர்கள் ஏற்கனவே தயாராக வைத்திருந்த சிறு பெட்டியுடன் தப்பி நாட்டைவிட்டு ஓடவேண்டியிருந்தது.

இவ்வாறு வெளியேறியவர்களில் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பிரபலமானோர், உதாரணத்திற்கு சர்வதேசப் புகழ் பெற்றவர்கள் சிலரை இங்கு குறிப்பிடலாம்.

Lion Feuchtwanger, Anna Seghers, Erich Maria Remarque, Heinrich Mann, Thomas Mann (எழுத்தாளர்கள்), Kurt Tucholsky (பத்திரிகையாளர்) Albert Einstein (விஞ்ஞானி) Sigmand Freud, Eric fromm (உளவியல் ஆய்வாளர்கள்) Ernst Bloch (தத்துவஞானி) Hans Eisler (இசையமைப்பாளர்) Bertolt Brecht (நாடகாசிரியர்) Ernst Busch (நடிகர்) Oscar Kokoschka (ஓவியர்) Walter Gropius (கட்டிடக் கலைஞர்)

இவ்வாறு புலம் பெயர்ந்தவர்களுக்குப் பெரும்பாலான அயல் நாடுகள் தற்காலிக புகலிடத்தையே வழங்கின. பிரான்சுக்கு சொந்தமாயிருந்த சார்லாண்ட் எனும்

www.tamilarangam.net



ஜேர்மன் மொழி பேசும் மக்கள் வாழ்ந்த இடத்தை நோக்கித் தப்பி ஓடிய அகதிகளுக்கு, அந்தப் பிரதேசமும் 1934ல் சர்வஜன வாக்கெடுப்புக்குப் பின்னர் பிரான்சிடமிருந்து ஜேர்மனியிடம் கைமாறியமை, மேலும் பிரச்சனைகளை எழுப்பியது. டென்மார்க் இவர்கள் கட்டாயம் விசா பெறவேண்டும் என நிபந்தனை விதித்தது. தற்காலிகமாக எனினும் ஆகக் கூடியது மூன்று மாதங்களே தங்கியிருக்கலாம் என்று விதித்தது. ருசியாவில் 1936 தொடக்கம் 1938 வரை நடைபெற்ற மொஸ்கோ வழக்கின்போது, ருசியாவில் தங்கியிருந்த ஜேர்மன் அகதிகள் ஆயிரக் கணக்கில் கைதாகினர்.

அன்று ஜேர்மன் அகதிகளுக்குப் பாதுகாப்பான இடமாக இருந்த செக்கோஸ்லாவாக்கியா, 1938ல் ஜேர்மன் துருப்புகளால் கைப்பற்றப் பட்டது. ஜேர்மனியில் இருந்து தப்பி வேறு நாட்டுக்குத் தஞ்சம் தேடிப் போன இடத்திலும் இவ்வரக்கர்கள் புகுந்ததும் அங்கிருந்து வேறு நாடுகளைத் தேடிப் போகவேண்டி இருந்தது. ஆனால் மிகப் பலருக்கு இது இலகுவில் கைகூடவில்லை. கைது செய்யப்பட்டும், சித்திரவதைக்கு உட்பட்டும் முகாம்களில் இவர்களது எலும்புக்கூடுகளே மிஞ்சின. இதே ஆண்டில் (1938) ஜேர்மன் அகதிகள் தம் நாட்டுக்குள் வருவதை ஒல்லாந்து தடை செய்தது. சுவிற்சர்லாந்துக்கோ கட்டாயம் விசா பெற வேண்டியிருந்தது. 1942ல் சுவிற்சர்லாந்தும் தனது எல்லைக் கதவுகளை அகதிகள் உள்ளே நுழைந்து விடாதவாறு மூடிவிட்டது.

1940ல் ஒல்லாந்து, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளில் பெருமளவில் அகதிகள் தஞ்சம் புகுந்தனர். இவர்கள் தடை முகாம்களில் நெருக்கி அடைக்கப்பட்டனர். எந்த நேரத்திலும்

## மனம் —

வீதி விபத்தொன்றில்-
இல்லை,
வேறெதோ இளமை அவசரத்தில்
எனதாத்மா
கொலையுண்டு போனதாய்ச்
சொன்னேன்.

இல்லையென்றார் எனது
நண்பர்கள்,
தொலைந்துதான் போயிருக்கும்
ஆனாலும் கொலையில்லை என்று
கொல்லைப் புறமெல்லாம் தேடிச்
சலித்துவிட்டு
இல்லைத்தான் ஆனாலும்
எளிதில் கிடைத்துவிடும்
என்றார்.

நம்பியிருந்தேன்,
இடையிடை
கள்ளுக் குடிக்கையிலும்
தோளில் தட்டிச் சொல்வார்
'தொலைந்ததெல்லாம் மீட்டிடலாம்'

நெடுநாளின் பிறகாக
நீட்டிச் சவம் கிடத்தி
நெருப்பெரிக்கும் சுடலையிலே
பாதிக் கருக்கலுடன்
மீட்டெடுத்தேன்.

நேற்றுக் காலை-
புன்னகைக்க மறுத்த
என் பெண்ணே!
இனி-
எந்த இடுகாட்டில்
இதை நான் புதைக்க?

இளவாலை விஜயேந்திரன்
07.08.88

www.tamilarangam.net



ஜேர்மனிக்கு நாடு கடத்தப்படலாம் என்ற பீதியிலேயே இவர்கள் நாட்கள் கழிந்தன. இவ்வாருன தடை முகாம்களில் 'கெஸ்ராபோ' (Gestabo) என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட- அரசியல் எதிரிகள் மீதான ஜேர்மன் அரசிஞல் ஏவப்பட்ட- உளவுப் பொலிசாரின் நேரடிக் கண்காணிப்பு தாராளமாகவே இருந்தது.

ஹிட்லரின் அதிகாரக் கைப்பற்றலுக்குப் பிறகு இந்த நாசிகளின் ஆட்சி நீண்ட காலத்துக்கு நீடிக்கப் போகிறது என்பது தெளிவாகியதும் பெரும்பாலான மக்கள் தமது வாழ்க்கையை நீண்ட காலத்துக்கு வெளியிலேதான் கடத்தியாக வேண்டியிருந்தது. ஆனுல் பலருக்கு இது சாத்தியமாகவில்லை. அந்த ஆண்டுகளில் வேறு எந்த ஐரோப்பிய நாட்டிலும் இவர்கள் பாதுகாப்பு என்பது சந்தேகத்திற்கு இடமானதாகவே இருந்தது. இதனுல் இவர்கள் கடல் கடந்து ஐரோப்பாவில் இருந்து வெகு தொலைவில் பாலஸ்தீனம், அமெரிக்க ஐக்கிய ராச்சியம், லத்தீன் அமெரிக்கா, விசேடமாக மெக்சிகோ போன்ற இடங்களுக்குத் தப்பிச் செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் இங்குதான் அதிகாரக் கெடுபிடிகள் அதிகம் இல்லாமலே தஞ்சம் புக முடிந்ததுடன் தம்முயிரைப் பாதுகாக்கவும் முடிந்தது. பெரும்பாலும் ஜேர்மன் அகதிகள் யாவரும் தம் புகலிட வாழ்வில் ஆகக் குறைந்தது இரண்டு மூன்று நாடுகளையாவது கண்டவர்களாகவே இருந்தனர். இந்த அகதிகள் பலரால் ஜேர்மனியை விட்டுத் தப்பி வெளிநாடுகளுக்கு ஓடமுடிந்ததே தவிர அங்கு தம்முயிரைக் காப்பாற்றிக் கொள்ள முடியவில்லை.

சுமார் இரண்டாயிரம் எழுத்தாளர்கள் பெரும் பிரச்சனைக்கு உள்ளாகினர். பணத்துக்குப் பெரும் பஞ்சம் நிலவியது. அவர்களது எழுத்துகளுக்கு அங்கீகாரமோ, புகுந்த நாட்டு மக்களிடத்தில் இவற்றிற்குப் போதுமான ஆர்வமோ காணப்படவில்லை.

### நெஞ்சுரம்

சிவா
- ஸ்ரீ[illegible]

வெண்மையுங் குங்குமமுமாக
வசந்தத்தின் முன்னறிவிப்பு
ப்ளம் மரங்களில் மலர்களாய் விரியும்
வருடந் தவருது
குளிர்காற்றும் மழையும்
ப்ளம் மலர்களைச் சிதறி விழுத்தும்
வருடந் தவருது
ப்ளம் கிளைகள் மலர்களுள் மூழ்கும்
காற்று அறியுமோ
மழை அறியுமோ
ஏன் எவ்வாறென்று .

ஆயினும் இந்தப் பிரச்சனைகளுக்கு மத்தியிலும் இவர்கள் பல அச்சகங்கள், பதிப்பகங்களை நிறுவினர். ஜேர்மன் மொழியில் தினசரி, சஞ்சிகைகளை வெளியிட்டனர். இவ்வாறு வெளியான சஞ்சிகைகள் சில; பிராக்கிலும்

## பிறாண்ஸ் ஹெல்மிட் றிஸ்ரர்
## Franz Helmut Rister

லண்டனிலும் இருந்து இலக்கியம், இலக்கிய விமர்சனத்துக்கான மாத சஞ்சிகையான 'புதிய ஜேர்மன் தளிர்கள்' (Neue deutsche Blaetter), பாரிசில் இருந்து 'புதிய நாளேடு' (Das neue Tagebuch), வருங்காலம் (Zukunft),

www.tamilarangam.net



'பாரிஸ் நாளிதழ்' (Pariser Tage blatt), மொஸ்கோவில் இருந்து 'வார்த்தை' (Das wort), மெக்சிக்கோவில் இருந்து 'சுதந்திர ஜேர்மனி' (Freies Deutschland), பாலஸ்தீனின் காய்பாவில் இருந்து 'கீழ்த் திசை வானம்' (Der orient) எனப் பல பத்திரிகைகள் வெளிவந்தன. ஆனால் இவற்றில் சொற்ப பிரதிகளே அச்சிடப்பட்டன.

அன்னியமாகிப் போன அகதிகள் வாழ்வில் இவ்வாறன சிறு பத்திரிகைகளே பல எழுத்தாளர்களுக்கு செத்துக் கொண்டிருக்கும் தம் ஆத்மாவை தக்க வைப்பதற்கான ஒரே ஒரு பற்றுக்கோலாக அன்று காணப்பட்டன. இல்லாவிடில் மரணித்துப் போன ஆத்மாவைச் சுமந்த நடைப் பிணங்களாகவே அவர்கள் வாழ்ந்திருப்பார்கள்.

எவ்வாறாயினும் இவர்களில் பலர் தீண்டத் தகாதவர்களாக, அன்னியர்களாகவே வாழ்ந்தனர். தமது சொந்த நாட்டிற்குத் திரும்பிய பின்னும் கூட அவ்வாறே அன்னியர்களாக, தள்ளி வைக்கப் பட்டோராக வாழ்ந்து முடித்தனர். இன்னும் மோசமானது இவர்களது அன்றைய புகலிட அனுபவங்கள் இன்று பெரும்பாலும் மறக்கப்பட்டு விட்டது என்பதாகும்.

ஒரு ஒப்பீடு

அன்றைய ஜேர்மனியர்களின் அகதிகள் வாழ்நிலை நிபந்தனைகள் எவ்வாறு இருந்தனவோ அதிலிருந்து அதிகம் வித்தியாசம் இன்றியே இன்று மேற்கு ஜேர்மனியில் வாழும் ஈழத்தமிழ் அகதிகள் நிலையும் உள்ளது. உதாரணமாக பொருளாதாரப் பிரச்சனைகள், அகதி முகாம்களிலான வாழ்க்கை, உறுதியற்ற தரிப்பிடம், வேலை கல்வி போன்றவற்றுக்கான சட்டரீதியான தடை, ஒவ்வொரு அலுவலகங்களிலும் ஏற்படும் தஸ்தாவேஜக் கெடுபிடிகள், மொழிப் பிரச்சனை, தனிமைப்பட்ட நிலை, தமது ஆக்கங்களை வெளியிட வாய்ப்புகள் இல்லாமை,, தஞ்சம் புகுந்த நாடுகளில் இவர்களின் படைப்புகளுக்குப் போதிய ஆர்வமின்மையும், புரிந்து கொள்ளப் படாமையும் எனப் பலவற்றைக் கூறலாம்.

## 3000 ஆண்டு மனிதர்கள்

நோர்வேயில் 3000ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் வாழ்ந்துள்ளனர். இதற்கான ஆதாரமாக ஒஸ்லோவிலிருந்து சிறிது தொலைவில் கிழக்குப் பகுதியில் (ஒஸ்ட்ஃபோல்ட்) உள்ள 'ரோல்வ்சொய்' என்னுமிடத்திலுள்ள கற்பாறைகளில் 3000ஆம் ஆண்டுகள் பழமையானது எனக் கருதப்படும் சித்திரங்கள் காணப்படுகின்றன.

இக் கற்பாறைகளில் மிருக உருவங்களும் (வாலுள்ள சில மனித சித்திரங்களும் உண்டு), சூரிய சக்கரம், கப்பல்கள் (வீக்கிங் கப்பலின் ஆரம்பப் படியான தோற்றங்கள்), மிருகங்கள், பனிச்சறுக்கி போன்ற சித்திரங்களும் உள்ளன.

நோர்வே மக்களும் அரசும் இத்தகைய சரித்திர ஆதாரங்களைப் பாதுகாக்க பலத்த முயற்சி செய்கின்றனர். ஆனால் ஈழப்பகுதியில் 300, 400 ஆண்டுகள் மட்டுமே பழமை வாய்ந்த, இவ்வாறன சரித்திரச் சின்னங்களைப் பற்றி எவ்வளவு தூரம் நாம் அக்கறை கொள்கிறோம்? கவனமாகப் பேணுகிறோம்? உதாரணமாக சங்கிலியன் தோப்பு இருந்த இடம் தனியார் கைவசமாகி முகப்புக் கட்டிடம் இடிந்தழிகிறது. மழையும் வெயிலும் என காலநிலையின் சகல சோதனைகளையும் தாண்டவேண்டிய நிலையில் உள்ளது. அதைப் பேணிப் பாதுகாக்காமல் நாம் சங்கிலியனுக்கு சிலை வைத்திருக்கிறோம். இன்னும் இது போல் எத்தனையோ, ஏற்கனவே எமது சரித்திரம் திரிக்கப்படுகிறது. இந்நிலையில் நாம் எப்போது விழித்துக் கொள்ளப் போகிறோம்?.

புலம்பி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜேர்மனியில் தமிழ்ச் சஞ்சிகைகள்

எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து இலங்கையிலிருந்து ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியோரில் பல அறிவுஜீவிகளும் அடங்குவர். இலங்கையில் இவர்கள் மீதான அடக்குமுறையும், கண்காணிப்பும் கொஞ்ச நஞ்சமல்ல. இலங்கையில் பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் அடிக்கடி மூடப்பட்டன. 1981ல் மிகப் பெரிய நூலகமான யாழ். நூலகம் எரிக்கப்பட்டதன் மூலம் அனேக மூலப் பிரதிகள், ஏட்டுச் சுவடிகள், அரிதான நூல்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகின. பத்திரிகை நிலையங்கள் (உதாரணம்: ஈழநாடு) எரிக்கப்பட்டன. செய்திப் பத்திரிகைகள் சஞ்சிகைகள் மிகக் கடுமையாகத் தணிக்கை செய்யப்பட்டன. தமிழ் மொழிக்குப் போதிய அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

1981ல் தமிழர்களின் ஜேர்மன் நோக்கிய வருகையை அடுத்து, ஜேர்மனியர்களால் போதிய அக்கறைக்கு உட்படுத்தப் படாத நிலையிலும் தமிழரின் புகலிட இலக்கியங்கள் மலர்கின்றன. அனேக புத்தகங்கள் சஞ்சிகைகள் வெளியிடப் படுகின்றன. ஜேர்மன் இலக்கிய ஆய்வாளர் எவர் கண்ணுக்கும் இவை இன்னமும் தென்படாமலேயே உள்ளன.


இன்று சுமார் 16 தமிழ்ச் சஞ்சிகைகள் ஜேர்மனியில் இருந்து மட்டும் வெளிவருகின்றன. (மேலும் குறைந்தது நான்கு பத்திரிகைகள் பிரான்சிலும் இரண்டு நோர்வேயிலும் இரண்டு ஒல்லாந்திலும் இங்கிலாந்தில் இருந்து இரண்டு சுவிற்சர்லாந்தில் இருந்து ஒன்று என ஐரோப்பாவில் வெளிவருகின்றன)

இவற்றில் சிந்தனை (1985லிருந்து ஸ்ருட்காட்டிலும்), தூண்டில் (88ல் இருந்து டோட்முண்டிலும்), தேனீ (88ல் இருந்து அல்மேர்ஸ் பஃஇலும்) புதுமை (88ல் இருந்து பிராங்பேட்டிலும்), அக்னி (90ல் இருந்து அஸ்பேர்க்), தென்றல் (மூன்ஸ்ரர்) எனப் பலவற்றைக் கூறலாம். பேர்லினில் இருந்து மட்டும் ஐந்து சஞ்சிகைகள் வெளிவந்த போதும் ஒன்று மட்டும் தொடர்ந்து வெளியாகிறது.

மேலும் சுவிற்சர்லாந்தில் இருந்து 'மனிதம்', நோர்வேயில் இருந்து 'சுவடுகள்'


சுவடுகள் சந்தா விகிதம்

| | |
|---|---|
| நோர்வே, சுவீடன், டென்மார்க் | 300 NKR |
| ஐரோப்பிய நாடுகள் | 400 NKR |
| ஏனைய நாடுகள் | 500 NKR |
| வங்கிக் கணக்கிலக்கம் | 160752 13062 |




சுவடுகள் விளம்பர விகிதம்

| | |
|---|---|
| உள் அட்டை | 350 NKR |
| முழுப் பக்கம் | 250 NKR |
| அரைப் பக்கம் | 150 NKR |
| பின் அட்டை | 400 NKR |

தொடர்புகட்கு: SUVADUHAL
Herslebs Gate 43
0578, Oslo 5
NORWAY

வங்கி மூலமாக மாத்திரமே பணத்தைச் செலுத்தி உதவவும்

www.tamilarangam.net



ஒல்லாந்தில் இருந்து 'அ,ஆ,இ' பிரான்சில் இருந்து 'கண்', 'சிந்து' போன்றவை வெளிவருகின்றன.

சிறுபத்திரிகைகளுக்கே உரித்தான குறைந்த ஆயுட் காலமும், குறைந்த அளவு பிரதிகளே வாசிக்கப் படுவதுமான குணும்சங்கள் இவற்றையும் விட்டுவிடவில்லை. இங்கு வெளிவருபவற்றின் பிரதிகள் முன்னூறுக்கு மேல் தாண்டுவதில்லை.

இதைவிட ஜேர்மனிக்கு தமிழ்ச் சஞ்சிகைகள் என்று தென்னிந்தியாவின் வர்த்தகச் சஞ்சிகைகளும் அரசியல் சார்பான பத்திரிகைகளும் வந்தடைகின்றன. பெருமளவில் அச்சடிக்கப்படும் இந்தச் சஞ்சிகைகளிலிருந்து புகலிடச் சஞ்சிகைகள் வேறுபடுகின்றன. இந்த வர்த்தக ரீதியான சஞ்சிகைகள் இந்திய பலசரக்குக் கடைகளில் வீடியோ, ஒடியோ கசற் போன்றவற்றுடன் விற்பனையாகின்றன.

ஜேர்மனியில் இந்தச் சஞ்சிகையாளர்கள் பெருமளவு தொழில் நுட்பப் பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர். தட்டச்சு இயந்திரம் ஜேர்மனியில் இல்லாமையால் ஏற்கனவே வெளிவந்த விசேட கட்டுரைகள் பல்வேறு ிசைகளில் இருந்து கத்தரிக்கப்பட்டு மீண்டும் பிரதி செய்யப்படுகின்றன. தனித்துவமான ஆக்கங்களைக் கையாலேயே ஆரம்பத்தில் எழுதினுர்கள். இந்த அச்சு ரீதியான பிரச்சனைகள் இன்று ஓரளவு தீர்க்கப் பட்டுவிட்டன. ஒருசில தவிர்ந்த ஏனையவை இன்று தட்டச்சின் மூலமாகவோ அல்லது கொம்பியூட்டர் மூலமாகவோ அச்சிடப்படுகின்றன.

<u>தமிழ் எழுத்துகள்</u>

தமிழ் அகதிகளால் வெவ்வேறு நாடுகளில், நகரங்களில் ஒருவருக்கு ஒருவர் தொடர்பில்லாமலேயே தமிழ் எழுத்துகளை கொம்ப்யூட்டர் மூலம் எழுதும் முறையை அபிவிருத்தி செய்தனர். இதைவிடக் கஷ்டமானது இச் சஞ்சிகைகள் எதிர்நோக்கும் பணமுடையாகும்.

(அடுத்த இதழில் முடியும்)

## சிம்மாசனமும் சவப்பெட்டியும்

சிம்மாசனத்திலிருந்து
கீழ் இறங்குகிற
படிக்
கட்டுகள்
மீதாக
இறங்கிவருகிற
இரத்தம்
தேசத்
தின் சவப்
பெட்டி மீது
துளித் துளி
யாக வீழ்கிறது
இந்தச் சவப் பெட்டி
யின் கடைசி
ஆணியை யாவது
அடித்து விடா
மலிருங்கள். தய
வு செய்து....
தயவு செ
ய்து...த
யவு செ
ய்து..
தயவு

— கௌதமன் —

www.tamilarangam.net




# பிறந்த நாள் விழாக்களா?

# கலை நிகழ்ச்சிகளா?

# திருமண வைபவங்களா?

ஒரே நாளில் முடிந்துவிடும் இந்த நிகழ்ச்சிகளை வாழ்நாள் முழுவதும் நினைவுகூர, இந்த நிகழ்ச்சிகளைத் தரமான முறையில் ஒளி, ஒலிப்பதிவு செய்து கொள்ளுங்கள்.

தரமான முறையில் ஒளி, ஒலிப் பதிவுடன் சிறந்த முறையில் வீடியோப் படப்பிடிப்பு மேற்கொள்ள நோர்வேயின் எல்லாப் பகுதிகளில் உள்ளோரும் நினைவில் வைத்திருக்கவேண்டிய ஒரே இடம்.

**THANGAM VIDEO VISION,**

**S.JEGANATHAN,**
Brei Gata 3
0187, Oslo 1

தொலைபேசி இலக்கம்: 02/179509

திருமண வைபவங்களுக்குத் தேவையான மணவறை, அலங்காரப் பொருட்கள் யாவும் குறைந்த வாடகைக்கு வழங்கப்படும்.

அழகான முறையில் திருமணப் பத்திரிகைகள் அச்சடிக்க எங்களை நாடுங்கள்.

***** தங்கம் வீடியோ விஸன் *****

**நோர்வே**

www.tamilarangam.net



# மரணம்

'நித்திரை வரா இரவுகள்' என்ற வரிகளே ஞாபகத்துக்கு வந்தன. நள்ளிரவு கடந்து நீண்ட நேரமாகியும் இப்படி உறக்கமின்றி சும்மா படுத்துக் கிடப்பது மனதில் பீதியை உண்டு பண்ணுகிறது. மரங்களின் இலை காற்றில் அலையும் ஒலி... இனந்தெரியாத பறவைகளின் ஒலி... அபசுரமாக என் கட்டில் எழுப்பும் ஒலி... ஏன் எனது சுவாச ஒலிகூட காதுவழியாய் நுழைந்து செல்கிறது.

சாறணல் தரையை தட்டிவிட்டு விழுவதுதான் தாமதம் 'மாடு மாதிரி' காலை வரையும் எதையும் உணராமல் நித்திரை கொண்ட நாட்களை நினைத்துப் பார்க்க மட்டுமே முடிகிறது. நித்திராதேவி எனக்கு முன்பெல்லாம் நிறையருள் பாலித்தாள். அவளுக்கு என்மேல் இருந்த 'கொள்ளைப் பிரியம்' எப்படி விட்டுப் போனதோ தெரியவில்லை.

நேற்றுக் காலை வளாக பெஞ்சில்- அந்த சரிந்த கொன்றை மரத்தின்கீழ் சிகரெட் புகையை உள்ளிழுத்துக் கொண்டிருக்கையில் பைத்தியத்தின் முதல் அறிகுறி நித்திரை வராதாம் என சிரித்துக் கொண்டே நண்பன் கூறியது நினைவிற்கு வந்தது. தலையைப் பிய்த்துக் கொள்ளும் வெறித்தனம் உள்ளெழுந்தது.

திகதியும் கிழமையும் ஞாபகம் அற்றுப்போன- ஒரு மாதத்தின் முன்பான ஒரு மாலைப் பொழுதில் மௌனமான சிரிப்புகளுடன் வழமையான அந்த- நிழல் பரவிய முன்வீதி வளாக கட்டடங்கள் முக்கால்வாசியும் தெரியிற மாதிரியான- பெஞ்சில் அமர்ந்தோம். நிறையவே கதைத்தோம். புன்சிரிப்புகள் ஆரம்பத்திலேயே எல்லோரிடம் இருந்தும் மறைந்து போயிற்று. வெறுப்பு, வியர்வை இவற்றுடன்தான் கதைத்தோம்.

"சரி... இப்ப..." சுற்றிச் சுற்றி ஒரே முனையில்தான் வந்து நின்றோம்.

விலகிப்போவது, ஓடுவது அவர்களுக்குப் பெரிய விடயம் இல்லைத்தான். ஆயிரக்கணக்கில் ஒன்று குறையும். இப்படிக் கேவலமாக கதைத்துக் கொண்டு இருப்பதைத்தான் பொறுக்க முடியாமல் போனது போலும். முகத்தில் வழியும் வியர்வையை இருகைகளாலும் அழுத்தித் துடைத்துக் கொண்டு அழகிய பற்கள் தெரிய... அவன்தான் நேரடியாக இதைக் கூறினான். அந்தக் கணத்தில்தான்

**மட்டுநகர் விஜயன்**

எல்லாமே முடிவுக்கு வந்ததாய் ஞாபகம். நான் பொறுமை இழந்து- ஆத்திரத்துடன் கூறினேன்.

"இனிமேல் முடியாது..."

அவர்களுக்கு அலுப்பு ஏற்படலாமோ என்னவோ. இப்படி எத்தனை சந்தர்ப்பங்கள். எனது பாதை இதுவாக இருக்கமுடியாது; எனது மனதுள் உரக்கக் கூறிக்கொண்டேன். நிசப்தமாக இருந்த சில நிமிடங்களின் பின்... அவர்கள் எழுந்தார்கள். முகங்களில் தொற்றிக் கொண்டிருப்பது என்ன என்பதை புரியவே முடியவில்லை. புன்சிரிப்பை உதிர்த்துச் சென்றதாகவே நினைத்துக் கொள்ளத் தோன்றியது.

இனி...

குதறும் பார்வைகளுடன் அவர்களை எங்காவது ஒரு சந்தியில்..., ஒரு குறுக்குப் பாதையில்- அதுதான் குடல்வழிபோல நகரம், கிராமம் நீளத்துக்கும் விரிந்து கிடக்குமே... அதுதான் எங்கள் ராஜபாட்டையில் சந்தித்துக் கொள்வேன் என்பது ஞாபகத்துக்கு வந்தது. ஆயிரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கருத்துக்கள் மலர்வதும்- பூப்பதுவும் பற்றி இருள் சூழ்ந்த ஒரு இரவு நேரத்தில் இவர்களுடன் கைகளையும், நம்பிக்கைகளையும் இறுகப் பற்றியவாறு கதைத்துத்தான் இருக்கிறேன். இப்படியான பின்... என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது.

கருத்துப் பூப்பதாவது... மலர்வதாவது.

வெறுமை வியாபித்துக் கவ்வியது. நினைவுகளுடனும், தூரத்தே தெரியும் சிறிய நம்பிக்கையுடனும் காலத்தை நகர்த்த வேண்டியதுதானு?

வேகமான மோட்டார் பைக்கின் ஒலி... சுருதி குறைந்து கேட்கத் தொடங்கியது...

அவர்கள் "நண்பர்கள்தான்"... கதைத்துச் சிரிப்பது காது, உடல் பூரா ஒலிப்பது மாதிரி...

அவனின் சிரிப்பைக்கூட என்னுல் சுருதி மாருமல் கேட்க முடிந்தது.

சிலவேளை... 'அப்படி...'

பீதி உடல்பூரா பரவியது.

ப்பூ... மரணந்தானு என்ற நினைவு எழவே மாட்டேன் என்றது. எனக்கு நானே புதை குழியை வெட்டிவிட்டு, மரணசாசனம் வாசிக்கும் "நண்பனின்" - மாஜி தோழனின்- முகத்தைப் பார்த்துக் கொண்டு

ஓடு... ஓடு... எங்காவது ஒளிந்துகொள்!

பிறகுதான்...

ஏதோ யாருமே நுழைந்துவிட முடியாத கோட்டை என்ற நினைவுடன்... இந்த அறையினுள் வந்து விழுந்தேன். சின்னஞ்சிறு அழகிய றூம் இது.

பின்தான்...

நிலவு- அதன் ஒளி, இருள்... அதன் கோரம் எல்லாவற்றையுமே பார்த்துப் பார்த்து.

ஆயிரம் தளைகளுடன் அந்தரத்தில் மறந்த நிலையில் ஊசலாடி... எல்லாவற்றையுமே மிச்சமின்றி அறுத்துத் தொப்பென விழுந்து கிடக்கிறேன். விழுந்ததோ... தனிமையும் வெறுமேயும் நிறைந்த ஒரு ஆழமான புதைகுழி.

எவ்வளவு நாளாயிற்ருே தெரியவில்லை, இந்தக் 'கோட்டை'யினுள் நுழைந்து இன்று...

யன்னலினூடே நிலவு தென்பட்டு, அறையினுள் ஒளிபரவிக் கிடந்தது ஞாபகத்தில் இருக்கிறது. இப்போ சில நாட்களாகக் கரிய இருள் எல்லாவற்றையுமே மூடி பீதியை ஏற்படுத்திக் கிடக்கிறது. பசிய ஒளியை வீசும் நிலவுமாதிரி... இந்தக் கரிய இருளை வீசும் ஒரு வட்டமோ... சதுரமோ... ஒரு பொருள் தென்பட்டால் பரவாயில்லைப் போலிருந்தது. இரவுக்கும் ஒரு குறியீட்டை அவசியம் தேடியாக வேண்டும் என நினைத்தேன். இருட்டினூடே துளாவி சேட்டைத் தேடி எடுத்தேன். சிகரெட் எதுவுமில்லை. தண்ணீர்ச் செம்பை மேசையில் வைத்த ஞாபகம். அப்படியே படுத்துக் கிடந்தேன்.

வட்டமோ, சதுரமோ... இருள் வீசும் அதைக் கண்டுபிடித்து ஒரு உதை விட்டேயாக வேண்டும்.

0 0 0

நான்கு மணிக்குப் பத்து நிமிடங்கள் இருந்தன. அலுவலகம் முடிவுறும் சுறுசுறுப்புத் தொற்றிக் கொண்டது. வாய்விட்டுச் சிரித்தபடி- அலுப்புகளைப் போக்கிக் கொண்டு வெளியே வந்தோம். சைக்கிளில்- மாலைச் சூரியனின் ஒளியில் நிமிர்ந்து நின்ற யாழ் நகரத்தை ஒரு சுற்றுச் சுற்றினேன்.

இருள் சூழ்கையில் 'கண்ணன் லொட்ஜி'ற்கு சைக்கிளை செலுத்தினேன். ஒரு 'பிளேன் ரீயை' சூட்டுடன் அருந்தினேன். 'மு'வுடன் கதைத்துக் கொண்டு சீவலை நிறையவே அள்ளினேன். வெற்றிலையில் சுண்ணும்பினைக் கொஞ்சமாகத் தடவி வாய்க்குள் போட்டேன். சிகரெட் ஒன்றை-

www.tamilarangam.net



இரண்டு தட்டுத் தட்டி மூட்டினேன். புகை காரமாக உள்சென்றது. வட்டம் வட்டமாக புகை உள்ளே செல்வதாகத் தென்பட்டது.

வெளியே பார்வை எறிகையில்...

அவள் தென்பட்டாள். கடையின் வெளியே- இருள் மெல்லியதாக மூடிய கைகளை இறுகப் பற்றியவாறு இருளில் கண்களை துளாவிப் பார்த்துக் கொண்டு நின்றோம்.

எவ்வளவு நாட்களின் பின் அவளைக் காண்கிறேன்.

தூமுக்கு வந்து கட்டிலில் சரிந்தபோது... இரவு நீண்டதாக இருக்க வேண்டும் எனப்பட்டது. அவள் கதிரையில் அமர்ந்திருந்தாள். நீண்ட நாட்களின் பின் இன்று... எப்படி சந்தித்துக் கொண்டோம். அவளில் பெரிதாக எந்த மாற்றமும் துளாவித் திரிந்த என் கண்களுக்குத் தென்படவில்லை. முன்பு போலவேதான். நெளி நெளியான மயிர்க் கற்றைகள் கறுத்த- கொஞ்சம் கரடுமுரடாய்த் தெரியும் முகம்; அளவாய் வெளிவரும் அதேபுன்னகை. அவளை முதன்முதலில் சந்தித்தபோது- இப்படித்தான் இதே புன்னகையுடன்தான் நின்றாள்.

மதிய நேரத்தில்- சனக் கூட்டமற்றிருந்த சிறிய வாசிகசாலையில் நான் அவளை முதன்முதலாக சந்தித்தேன். அங்கு அவள்தான் "..." நான் வேறு இடமிருந்து இன்றுதான் அங்கு வருகிறேன். இருவரும் அறிமுகமானவுடன் கைகளைத்தான் பற்றிக் கொண்டோம்.

உயிர்த் துடிப்புமிக்க யுத்தமுனை- வாழ்நாட்கள் அவை. நம்பிக்கை தவிர வேறு எதுவுமின்றி யுத்தமுனையினை சந்தித்துத் திரிந்த வேளை. வாசிகசாலையை விட்டு- மண் ஒழுங்கை ஒன்றினூடாக நானும் அவளும் நடந்து சென்றோம். பச்சையற்று காய்ந்துபோய் தோற்றந் தரும் கிராமம். வீடுகளிலிருந்தும் பாதையிலிருந்தும் நட்பு தொனிக்கும் பார்வைகளையும் புன்னகைகளையுங் கடந்து சிறு தொலைவு நடந்தோம்.

தேசத்தின் ஒதுங்கிய கிராமம் ஒன்றில்... கிராமத்தை விட்டுத் தனித்து ஒதுங்கி நிற்கும் வீடொன்றில் அன்றிரவு நாம் கிடந்தோம். இராணுவம் எந்த நிமிடமும் வந்து சேரலாம் என்று வாழும் கிராமம். விரைவாகப் பலரை ஒன்று சேர்த்தோம். முடிந்தவரை பாதுகாப்பு நிலைகளை அமைத்தோம். எந்த ஆயுதமும் எங்களிடம் இல்லை. நம்பிக்கைகள் மட்டுந்தான் அப்போதைய வாழ்வு. நானும் அவளும் கிழக்குப் புறத்தில் எதிரிகள் வரும் பாதையைக் காவல் காத்தோம். பின்பும் அன்று நீண்டநேரம் தூங்கவேயில்லை.

மெதுவான குரல்களில் கதைத்துக் கொண்டிருந்தோம். சாக்குகளை விரித்து சிறிய களிமண் வீட்டினுள் நான்குபேர் நிறைந்து கிடந்தோம். எங்கோ ஒரு மூலையில் உறங்கிக் கொண்டு- கனவுகளில் அழகிய தேவதைகளுடனும்- பல்நீண்டு இரத்தச் சிவப்பாய் தெரியும் பேய் பிசாசுகளுடனும் சந்தித்துக் கொண்டிருந்த நான்- அந்த இரவில் நண்பர்களுடன் உயிர்ப்பு மிகுந்த வாழ்வுபற்றி கதைத்துக் கொண்டிருந்தேன்.

அந்தக் கிராமத்தையே, தேசத்தையே, என் முழு உடற்பரப்பையே அந்த சிறிய வீட்டினுள்... குப்பி விளக்கின் மஞ்சள் ஒளிபரவிய இருள் நேரத்தில்- அலசினோம்.

நாளைய வேலைகளைத் தீர்மானித்தோம்.

மறுநாள்...

அயர்ந்து உட்கார்ந்ததாக ஞாபகமில்லை. இனிவரும் எந்த நிமிட நேரத்திலும் ஒரு யுத்த முனையை நாம் சந்திக்க வேண்டியிருக்கலாம். அப்படித்தான் அன்று அரக்கப் பரக்க நினைந்து அலைந்தோம்.

மாலையில்- இரவுப் பொழுதுகளில் நண்பர்களுடன் துப்பாக்கிகள் நிறைந்திருக்கும் பாதையில் மூச்சுக்கூட விடாமல் நடந்து வருவோம். எங்காவது 'பாதுகாப்பான' இடத்தில் கிடப்போம். குப்பிவிளக்கின் ஒளியில் நிறைய நேரம்

www.tamilarangam.net



காத்திருப்போம். துப்பாக்கிகளின் வேட்டுகளுடன் போட்டியிட்டுக் கொண்டு, நண்பன் என்னவாஞன் என்ற நினைவுடன் தலைதெறிக்க ஓடிய இரவுகளில் பேச்சற்று, குப்புறவோ மல்லாந்து விட்டத்தைப் பார்த்தோ படுத்துக் கிடப்போம். விளக்கைக்கூட மறந்து கிடந்திருக்கிருேம். மரணத்தை நம்பிக்கையுடன் தழுவியவர்களில்- நம்பிக்கைகளுடன் புதைத்துவிட்டு துயரமே சூழ திரிந்திருக்கிருேம். எப்படியான நாட்கள் அவை. அவசரம் அவசரமாக நாலைந்து புத்தகங்களுடன் அவர்களிடமிருந்து விடைபெறுகையில்... 'அவள்' கைகளை இறுகப் பற்றிக் கொண்டு- என் கண்களை துளாவி எதையோ தேடிக் கொண்டு நின்ருள். எதுவுமே கதைக்காமல் நான் விடைபெற்றேன்.

இன்னும்- கட்டிலில் சரிந்து அமர்ந்து கொண்டு அவளுடன் நீண்டநேரம் கதைத்தேன். நிலவு பிரகாசமாய்த் தென்பட 'லைற்'றை அணைத்துவிட்டு மீண்டும் அவள் கதிரையில் அமர்ந்து கொண்டாள். வாசிகசாலை இடிந்து- அங்கே பற்றைக் காடுகள் வளர்ந்து நிற்கிறது என்ருள். வாசிகசாலை... நெஞ்சை ஏதோவொன்று வருடியமாதிரி இருந்தது. அந்தக் கிராமமே அழிந்து அதுமட்டுமாவது தப்பியிருக்கக் கூடாதா என்ற ஆசை எழுந்தது. முன்வீட்டு... 'அம்மா' எங்கே போஞர்கள் என்றே தெரியவில்லை. வீடு இருந்ததற்கு எங்களுக்கு குரும்பைகளை தந்துவிட்டு மொட்டையாய் நிற்கும் ஒரு தென்னைமரந் தாஞம் காட்சி. அவளின் மூத்த மகன் வாசிகசாலை இடிவுகளுக்குள் மண்டையைப் பிளந்துகொண்டு இறந்து கொண்டிருந்ததாகச் சொன்ஞள். அவனின் முகத்தில் இப்போதும்- அந்தப் புன்னகை இருக்கிறதா எனப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

அசாத்தியத் துணிவுடன்... ஊரை வளைத்து நிற்கும் ஆமிக்காரன் எத்தனைபேர், எவரெவரை கைது செய்திருக்கிருர்கள் என்ற விடயத்தை முதன்முதலாக எங்களிடம் அவன்தான் கூறுவான். அவனுக்குமுன் எப்படியாவது எங்களுக்கு விபரம் வந்தால் போச்சு; அன்று முழுவதும் முகம் வாடிக் கிடக்கும்.

அந்தக் கிராமம்- கிராமங்களில் மூலைக்கு ஒன்ருய் வாழ்ந்த மனிதர்கள்- குடும்பங்கள் எல்லாவற்றையுமே தெரிந்து வைத்திருந்தார்கள். அவர்கள் என்ன சாப்பிடுவார்கள்... என்ன கதைப்பார்கள் எல்லாமே அவனுக்குத் தெரியும்போல.

திடீரென பொன்னம்பலக் கிழவரைப் பற்றிச் சொன்ஞள். எங்கோ தொலைதூரக் கிராமம் ஒன்றில் தோட்டங் கொத்தி வாழ்வதாகக் கூறிஞள். இப்போது போஞலும் ப்ளேன் ரீ போட்டு தந்துவிட்டுத்தான் ஆள் மறு அலுவல் பார்ப்பார் என்ருன். தலையை நிமிர்த்திஞன். நிமிடநேரம் மௌனம் கவ்வியது.

"ஆள் மாறவே மாட்டார்"

எங்காவது துப்பாக்கி ஒலிகள் ஒலித்து... பதறியடித்துக் கொண்டு பிள்ளையும் குட்டியுமாய் சனங்கள் வந்தால் சரி. எங்களிடம் வந்துவிடுவார்... அப்படி இப்படியாக உலாவிக் கொண்டு வாயை மூடிக் கதை கேட்டுக் கொண்டே இருப்பார். "சரி போய்ப் பார்த்திட்டு வருவமா?" என்று ஒரேயொரு வார்த்தைதான் கதைப்பார். கதையினூடே கிழவர் தோட்டஞ் செய்த வரலாற்றை கூறிஞள்.

ஆச்சரியந்தான்...

முன்மேசையில்... இவ்வளவு நாட்களாக நிமிடத்துக்கு நூறுகதை கதைத்துக் கொண்டு... இடையிடையே பைல்களில் எதையாவது எழுதிக் கொண்டிருந்துவிட்டு மறுவேளைகளில் சைக்கிளில் அலைந்துதிரியும்- சுந்தர்பற்றி. எனக்கு என்ன தெரியும். அவனது தகப்பன் எப்படி இருப்பார், வீடு எந்த ஒழுங்கையில்

www.tamilarangam.net



இருக்கும். என்ன நிறம் பூசியிருப்பார்கள்- எதுவுமே எனக்குத் தெரியாது.

அவள் இடையில் புத்தகமொன்றை எடுத்தாள். வரிகளை வாசித்தாள். -"ஒரு மனிதன் என்னவாக விரும்பினுன் என்பதை அவனுடைய செயல்கள் மட்டுமே தீர்மானிக்கும்" எவ்வளவு அழுத்தமாக இருந்தது குரல். அதே அழுத்தத்துடன் கண்களை நிமிர்த்தினுள். நான் கண்களை மூடினேன். அந்த வரிகளை மனதுள் நினைத்துக் கொண்டேன். அவளது பார்வை... அகல மறுத்து நின்றது.

0 0 0

நேரமாகித்தான் எழுந்தேன். அவள் மேசையில் சரிந்தவாறு ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள்.

இருவரும் குளித்து முடித்தோம்.

அப்போதும் மெதுவான குரலில் சுருதி தப்பாமல் கதைத்தாள். நேரம் போய்விட்டது.

கட்டிலின் கீழிருந்த சூட்கேசை இழுத்துத் திறந்தேன். மடிந்திருந்த சேட் ஒன்றை எடுத்து அணிந்தேன். கண்ணுடியில் முகத்தைப் பார்த்தேன். நீளக் கண்ணுடியில் அவள் தெரிந்தாள்.

வெளிறிய ஒரு நீல நிற சேட்.

அயனில் விழுந்து கனநாளாகிய ஒரு ஜீன்ஸ்.

சிறிய பையொன்றினுள் புத்தகங்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்தது தெரிந்தது. கதவைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தோம். சைக்கிளை அவள்தான் வெளியே உருட்டி வந்தாள். இராமநாதன் ரோட்டில்... பாரில் அமர்ந்தவாறு தெரிந்த ஒன்றிரண்டு நண்பர்களுக்கு புன்னகைத்தவாறு வந்தேன்.

வேகமும் இல்லாமல்- மெதுவாகவும் இல்லாமல் சைக்கிளை உளக்கிக்கொண்டு வந்தாள்.

திடீரென..."புத்தகம் எப்ப எடுத்துத் தருவாய்?" என்ருள்.

"வெகுவிரைவில்"

மணிக்கூட்டைப் பார்த்தேன்.

வேகமாக அலுவலகம் போகவேண்டும் எனப்பட்டது. நேராக அலுவலகம் போனுல் சரி...

"அவள்..." ●

---

நோர்வே அரசாங்கமானது கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு அவசர உதவியாக 100மில்லியன் குரோணர்களை (Nok) 1990 நிதியாண்டுக்கு வழங்கவுள்ளது. இதில் 35மில்லியன் நோர்வே குரோணர்கள் போலந்து நாட்டின் நாணயமாற்று விகிதத்தை சீர்ப்படுத்தவும் 16மில்லியன் குரோணர்கள் ருமேனிய நாட்டுக்கும் (இதில் 10ஆயிரம் குரோணர்கள் ருமேனிய நாட்டின் மனிதவுரிமை அமைப்புக்கு வழங்கப்படவுள்ளது) ஏனைய 45மில்லியன் குரோணர்கள் மற்றைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பிரித்து வழங்கப்படவுள்ளது.

– விதுரன் –

நோர்வே அரசானது ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கும் வெளிநாட்டு உதவிகளில் பெரும்பகுதியை ஆபிரிக்க நாடான தன்சானியா பெற்றுவருகிறது. வருடாந்தம் 50கோடி குரோணர்களுக்கு மேலதிகமாக வெளிநாடுகளுக்கான நோர்வேயின் உதவியைப் பெற்றுவரும் தன்சானிய ஜனுதிபதி அண்மையில் நோர்வேக்கு மேற்கொண்ட விஜயத்தின்பின் இவ்வுதவித் தொகை மேலும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக பத்திரிகைகள் அறிவித்துள்ளன.

– விதுரன் –

www.tamilarangam.net



# காணி நிலம்



-குறிஞ்சி மகன்-

'காணி நிலம் வேண்டும்' என்று பாரதியார் பாடியதைப் புகழ்ந்து நூற்றாண்டு விழா கொண்டாடிவிட்டு நாங்கள் தூங்கிப் போய் நாழிகையாயிற்று. நடு இரவில் எம்மை மீண்டும் உலுக்கி எழுப்புகிறது யதார்த்தம். பல வகைகளில் எமது உரிமைகளைப் பறித்து ஏப்பமிட்ட சிங்கள இனவாதிகள், இன்று புதிய நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இதுவரை சகல மனித உரிமைகளும் பறிக்கப்பட்டு சொல்லொணுத் துயரம் சுமந்த மலையக மக்கள் காலம் காலமாக வாழ்ந்த மலையகக் காணிகளைப் பங்கீடு என்ற பெயரில், சிங்களக் குடியேற்றத்தின் பெயரால் வடக்கு கிழக்கு நிலங்களைப் பறித்த அதே பாணியில் பறிக்கத் திட்டமிட்டுள்ளனர். இதனுல் மலையக மக்களின் இருப்புக்கே பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பொகவந்தலாவைப் பகுதியில் பெத்தாச்சி, கியூ, நோர்வூட், செல்வக்கந்தை (பிரிட்வெல்) தோட்டங்களில் தொடங்கியுள்ளது. இதனுல் மலையக மக்கள் பெரும் அச்சம் அடைந்துள்ளனர்.

இந்தத் துயரம் ஒருபுறமிருக்கட்டும் என நினைக்கும், மலையகத் தமிழர்களின் பணத்தில் உண்டு கொழுத்த இ.தொ.கா. தலைவர்கள் தொழிற்சங்கத்தின் (அரசியல் கட்சி) பொன்விழாவை 35லட்சம் ரூபா செலவில் தடல்நடலாக நடத்தி தம்மைப் பிரபலப் படுத்தும் நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

வரலாறு இவர்களை விட்டுவைக்கப் போவதில்லை. இ.தொ.கா.வின் அரசியல் வியாபாரத்தினுல் இன்றைய தலைமுறையினர் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர். படித்த இளைஞர்களை இ.தொ.கா. அலட்சியப் படுத்துவதும், தகுதியுள்ள இளைஞர்களை வளரவிடாமையும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஊழலும் இளைஞர்களின் விரக்திக்குக் காரணமாகும். கடந்த 40 வருடங்களாக இப்பிரச்சனை விஸ்வரூபம் எடுத்து வளர்ந்து வருகிறது.

ஏப்ரல் மாதம் 10ம் திகதி இரவு பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பதுளை கிளன் அல்பின் தோட்டத்தைச் சேர்ந்த இருவர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர்.

வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்தபோது மலையக இளைஞர் சிலரும் போராடத் திரண்டனர். ஆனல் பழுத்த அரசியல்வாதியான தொண்டமான் இந்த இளைஞர்கள் வளர்ந்தால் தனது தலைமைக்கு ஆபத்து

www.tamilarangam.net



வரும் என்று கருதி அவர்களை மக்களிடமிருந்து அந்நியப் படுத்தி தன் தலைமையைத் தக்க வைத்துக் கொண்டார்.

ஏனைய இளைஞர்கள் புரட்சிகர அரசியலில் இறங்காது தடுப்பதற்கு இன்று மலையகத்தினுள் வடக்கு கிழக்கு தேசியவாதிகளை அனுமதித்துள்ளார். இதனுல் புரட்சிகர சிந்தனையாளர்கள்

வடக்கு கிழக்கு கவர்ச்சி அரசியல்பால் ஈர்க்கப்பட்டு, புரட்சிகர அரசியல் தலைமை உருவாகாமல் போராட்டத்தை முளைமழுங்கடிக்க முடியும் எனத் தொண்டமான் கனவு காண்கிருர்.

இன்று மலையக மக்களின் குரல்வளையை நசிக்கும் காணிப் பங்கீட்டை எதிர்த்து நாம் அனைவரும் மலையக மக்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். இல்லையெனில் வரலாற்றின் முன் நாம் தலைகுனிந்தே நிற்கவேண்டிவரும்.

மீண்டும் காணிநிலம் வேண்டும் எனப் பாடிவிட்டுத் தூங்கப் போகிறோமா? நிலப் பறிப்புக்கு எதிராகப் போராடி உயிர் நீத்த சிவனு லட்சுமணனின் 13வது நினைவு தினமான மே 11ம் திகதியில் இவற்றை நாம் நினைவில் கொள்ளாமல் விடமுடியாது.



# புரட்சி வீரன்

மார்க்சிச விஞ்ஞானத்தை நடைமுறையில் பரிசோதித்துப் பார்த்த முதல் நாடான சோவியத் யூனியனில் புரட்சியை முன்னின்று நடத்தி, உலகெங்கும் போராடும் மக்களின் தோழனுக இன்றும் நினைவுகூரப்படும் லெனின் பிறந்ததினம் ஏப்ரல் 22ஆகும்.

சிறுவயதில் தமையன் அலெக்சாண்டர் ஜார்மன்னனைக் கொல்ல முயன்ற குற்றச்சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டமை லெனினை மிகவும் பாதித்தது. தமையன்மூலம் மார்க்சிசம் பற்றி அறிந்துகொண்ட லெனின், தமையன் பெரிதும் நம்பிய தனிமனிதப் பயங்கரவாதத்தைப் பெரிதும் நிராகரித்தார்.

கொடுங்கோல் மன்னனுன ஜார் மன்னனின் ஆட்சியில் உளவாளிகளால் தொடர்ச்சியாகத் தேடப்பட்ட லெனின் பலநாடுகளில் தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டிருந்தார். ஆயினும் தீப்பொறி (இஸ்காரா) என்ற பத்திரிகைமூலம் புரட்சிக்கு அவர் மகத்தான பங்காற்றினுர்.

மரணத்தால் உலகம் மறந்துவிட முடியாத மனிதர்களில் லெனினும் ஒருவராய்த் திகழ்கிருர். அவருடைய அனுபவங்களும், சிந்தனைகளும் இன்று ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவோரின் ஆயுதமாகப் பயன்படுகின்றன. இதனுல் உலகில் அதிகம் விற்பனையாகும் ஒருவரின் நூலாக லெனின் படைப்புகள் திகழ்கின்றன.

- நம்பி -

# ஆயிரம் புகைகள் தம்பட்டம்

அண்மையிலே ஒஸ்லோவிலிருந்து டென்மார்க்குக்குச் சென்ற 'ஸ்கன்டினேவியன் ஸ்டார் லைன்' நடுக்கடலில் தீப்படித்து எரிந்தது. இதில் நூற்றுக்கும் அதிகமானோர் இறந்துபோயினர். யார் யார் இறந்துபோனார்கள் போன்ற தகவல்கள் வருவதற்குள் மதியமளவில் நோர்வேயின் பலஇடங்களில் பொதுகட்டடங்களில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. இது இவர்களின் நாட்டுப்பற்றையோ அன்றேல் மக்கள் இழப்புப் பற்றிய இவர்களது அக்கறையையோ காட்டிற்று. இதைப் பார்த்து, எம்மில் பலர் இறந்தபோதும் வெளிநாடுகளில் வாழும் எம்மில் எத்தனை வீதமானவர்கள் இதுபற்றி அக்கறை செலுத்தினர்?

இதில் மிகவும் வேதனைக்குரிய விடயம் என்னவென்றால் இன்று சிலர் 'அங்கு பிரச்சனை இருந்தால்தான் நாம் இங்கு வாழலாம்' என்று வெளிப்படையாகக் கூறுகின்றனர். இதை நாம் கவனமாக ஆராய்வோமானால் உண்மைநிலை துலங்கும். எம்மில் பலரிடம் மக்கள் மீதான பற்றல்லாமல் வெறும் மொழிவெறியே தலைதூக்கிக் காணப்படுகிறது.

மொழிவெறி வேறு, தேசப்பற்று வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது. மொழிவெறி, மதவெறி போன்றதுதான். இதற்கும் கண்ணில்லை. இதயமும் இருக்கமுடியாது.

கூட்டணி முதல் இன்றைய இயக்கங்கள்வரை மொழிவெறியைக் கொண்டனவாக இருந்தனவேயன்றி புரட்சிகரமான அரசியற் தன்மைகளையோ, உன்னத தேசிய உணர்வு பற்றிய தெளிவோ கொண்டிருக்கவில்லை. தமது இலாப நோக்கிலேயே செயற்பட்டுவந்தன. ஈழத்திலே மக்கள் வெறுமனே இயக்க மயப்படுத்தப்பட்டனர்; ஆயுதமயமாக்கப் பட்டனர். ஆனால், அரசியல் மயப்படுத்தப் படவில்லை. எல்லா அமைப்புகளுமே மக்கள் அரசியல் மயப்படுத்தப் படுவதை வெறுமனே நிராகரித்தனர். காரணம் மக்கள் விழிப்புற்றால் தமது தலைமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும் என்பதும் தமது முதலாளித்துவ நலன்பேணும் போராட்டத்தைத் தக்கவைக்க முடியாது போய்விடும் என்பதுமே.

வெளிநாடுகளிலும் இதேமோசமான நிலை ஒருபடிமேலே சென்றது. வெளிநாடுகளில் ஏராளமாக பணஞ்சேர்க்க முடியும் என உணர்ந்த பலஅமைப்புகள் வெறுமனே இயக்க மயப்படுத்தலுக்கான பலபுதிய கவர்ச்சிகரமான நடவடிக்கைகளில்

www.tamilarangam.net



இறங்கினர். அதாவது தத்தமது இயக்கங்கள்பற்றி அதிதீரமான கற்பனைக் கதைகளைக் கட்டிவிட்டனர். தத்தமது இயக்கங்களுக்கே சர்வதேசத் தொடர்புகள் இருப்பதாக வாய்கூசாமல் கவர்ச்சிகூறினர். தத்தமக்கே இந்திய அரசிடமும் தமிழக அரசிடமும் செல்வாக்கு உள்ளதாகக் கூறினர். (இப்போது கேட்டால் அடித்து மறுப்பர்) அத்துடன் பலவர்ண புத்தகங்கள், சஞ்சிகைகள் மூலம் இயக்கவாதம், குழுவாதம் என்பன இறக்குமதி செய்யப்பட்டன. சில தத்தமது தலைவர்களை 'அவதாரமாக'க் கருதும் கற்பனைக் கதைகளை வெளியிட்டன. யாரும் அரசியல்பற்றி மூச்சுவிடவில்லை.

இனியாயினும் இவ்வாறு நீண்டதூரம் 'அரசியல்' அற்ற குதிரையோட்டம் கைகூடாது; அப்படிக் கைகூடுவது எதிர்காலத்தில் ஆபத்தாகப் போய்விடும். இன்றைய சூழ்நிலையில் வெளிநாடுகளிலும் சரி ஈழத்திலும் சரி மக்கள் சரியான முறையிலே அரசியல் மயப்படுத்தப்பட்டும் உனனதமான முறையிலே தேசியமயப் படுத்தப்பட்டும் இருக்கவேண்டும். (உன்னத தேசியப் பற்றென்பது வேற்றினங்களை துன்பப்படுத்துவதோ அன்றேல் அடக்கி ஒடுக்குவதோ அல்ல. அத்துடன் இது ஒரு குறித்த பகுதியினருக்கு மட்டுமே உரிய ஒன்றல்ல; மாறுக முழுமக்கள் சார்ந்த ஒன்று) இதனைச் செய்வதற்கு நல்ல கலை இலக்கியவாதிகளது பங்களிப்பு இன்றியமையாததாகிறது. இவர்களாலேயே உன்னத தேசியப் பற்றை மக்கள் மனதில் படிப்படியாக ஊட்டமுடியும். இதனைச் செய்யத் தவறுவோமாளுல் எமது சமூகம் சிதறுண்டு உருத்தெரியாமல் போய்விடும். இதனுல் முழுஇனமுமே அழிந்துபோக வேண்டிய நிலையும் ஏற்படலாம். இதுபற்றி யாராவது சிந்திப்பார்களா?

ப.சம்பந்தன்.
ஒஸ்லோ.

## மாயை

அன்ஞெரு அமைதிப் பொழுதில்
அமர்ந்திருந்தேன் வயோதிப மடத்தில்
கண்களில் தட்டிய காட்சிகள்
கட்டவிழ்த்தன என் சிந்தனையை

கண் எட்டும் தூரம்வரை
கறுத்த மரங்களின் வரிசைகள்
இயற்கையாகவே கறுத்தனவோ?- இல்லை,
வஞ்சித்த இயற்கைக்குக் கறுத்த கொடிகளா?

உருவிழந்த இம்மரத்தினைப் போல்
வாலிபமும் வசீகரமும் மறைந்திடுமோ!
மாயையான உலகில்
வாலிபமும் மாயைதான்.

வசந்தம் வந்திட இம்மரங்கள்
தளிர்த்திடும் மறுபடியும் புதுப் பொலிவுடன்
வயோதிபம் வந்த வாலிபர்தாம்
வசந்தத்தில் வாலிபராகிவிடுவரோ!

ஸ்ரீபன்
ஒஸ்லோ

சுவடுகளில் வெளியாகும் படைப்புகளில் உள்ள கருத்துகள் படைப்பாளிகளின் கருத்துகளே. இவை சுவடுகளின் கருத்தாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

— சுவடுகள்

www.tamilarangam.net

THE FULLY LICENCED IATA TRAVEL AGENCY IN OSLO HAVING THE NAME OF 'REISEHUSET' WHICH HAS LATEST EQUIPMENT TO MAKE YOUR TRAVEL EASIER, CHEAPER, COMFORTABLE AND TIME SAVING WITH SPECIALLY TRAINED AND EXPERIENCED STAFF.



# REISEHUSET

TRAVEL AGENCY

## GATE WAY TO

- COLOMBO
- MALE
- MADRAS
- TRIVANTRAM
- TIRUCHI
- FAR EAST AND AUSTRALIA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**REISEHUSET**
TRAVEL AGENCY

RAM PARTAP
Managing Director

Calmeyersgate 13
0183 Oslo 1
Norway

Tlf. (02) 36 27 50
Fax. (02) 36 45 04
Tlx. 79819 REISE N

எயர் லங்காவின் 1989ம் ஆண்டிற்கான சிறந்த முகவர் விருதினைப் பெற்ற

REISEHUSET
TRAVEL AGENCY

* தாய் நாட்டிற்கோ அல்லது தென்னிந்தியாவுக்கோ (மெட்றுஸ், திருச்சி, திருவனந்தபுரம்) பயணம் செய்யும் இலங்கையர்க்கு விசேட கழிவுபெற்ற பிரயாணச் சீட்டு வழங்குகிறோம்.

* ஒருவழிப் பயணத்துக்கும் (One way) விசேட கழிவுண்டு.

* உங்களின் சௌகரியமான பயணமே எமது நோக்கம்.

AIRLANKA
*It's a taste of Paradise*

IATA

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# செய்திகள்

மார்ச் 1

* வடமராட்சி மக்கள் இந்தியப் படைக்கு உருக்கமான பிரியாவிடை அளித்தனர் என இந்தியத் தூதரகம் அறிவித்தது.

* முஸ்லிம் மாகாண சபையை, முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே விரும்புவதாக அன்ரன் பாலசிங்கம் கூறினுர்.

* வட- கிழக்கு மாகாண சபை தன்னை ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய அரசு பேரவையாகப் பிரகடனம் செய்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் இதுபற்றிய விவாதத்திலோ வாக்கெடுப்பிலோ கலந்து கொள்ளவில்லை.

மார்ச் 2.

* ஈரோஸ் பா.உ.க்கள் பதவி விலகல் கடிதங்களை அமைப்பின் தலைவர் பாலகுமாரிடம் கையளித்தனர்.

* மாகாண சபை கலைக்கப்பட்டு, ஆருவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு, வடக்கு கிழக்கில் அவசர காலச் சட்டம் நீக்கப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரியுள்ளது.

மார்ச் 3

* ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இதன் சின்னம் வீணையாகும்.

* திருமலையில் வங்கிப் பணம் 2லட்சம் கொள்ளையடிக்கப் பட்டது.

* வட- கிழக்கு மாகாண சபை ஆளுனர் நளின் செனிவிரத்ன, சபை முதல்வருடன் திருமலையில் அரை மணி நேரம் பேசினுர்.

மார்ச் 4.

* இனப் பிரச்சனையைத் தீர்ப்பது தொடர்பாக ஜனுதிபதியைத் தவிர வேறு எவரிடமும் மாற்றம் எதையும் காணவில்லை என ஈரோஸ் கூறியுள்ளது.

* அனுமதி பெருது ஆயுதம் வைத்திருப்போரைக் கைது செய்ய அரச படையினருக்கு உத்தரவிட்டது.

* ஈழக் கோரிக்கைக்கு இந்தியா, தான் ஆதரவில்லை எனக் கூறியுள்ளது.

மார்ச் 5.

* சில மாத இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் பாராளுமன்றம் செல்ல ஈரோஸ் முடிவு செய்துள்ளது.

* உலக நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து ஆதரவு தேடுவதே தமது அடுத்த நடவடிக்கை என மாகாண முதல்வர் பெருமாள் கூறியுள்ளார்.

* வடக்கு கிழக்கில் சுவிஸ் 'கென்ரன்' முறையை ஏற்படுத்த வேண்டும் எனவும் மேலும் ஐந்து கோரிக்கைகளையும் புளொட் அரசிடம் முன்வைத்துள்ளது.

மார்ச் 6.

* எல்லாத் தமிழ் அமைப்புகளும் தமக்கு ஆதரவு தரவேண்டும் என யோகசங்கரி (பா.உ. ஈபிஆர்எல்எவ்) கேட்டுள்ளார்.

* இரு வாரத்தில் வட- கிழக்கு மாகாண சபை செயல் இழக்கும் என அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார்.

மார்ச் 7.

* ஈழப் பிரகடனம் செய்த மாகாண அரசுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் சிறிமாவோ அரசைக் கோரினுர்.

* மாகாண அரசு தனது பலவீனத்தை மறைக்கவே ஈழப் பிரகடனம் செய்ததாக ஈரோஸ் பா.உ பராராஜசிங்கம் கூறியுள்ளார்.

மார்ச் 8.

* பல வருட இடைவெளிக்குப் பின் கொழும்பு- யாழ் 'இன்ரசிற்றி' ரயில் சேவை ஆரம்பித்தது.

* நோர்வேயிலுள்ள அமைதி இலங்கையிலும் தோன்ற வேண்டும் என போருட் அமைப்பின் பணிப்பாளர்களில் ஒருவரான ருரிட் போக்ஸ்டாட், வவுனியாவில் வைபவமொன்றில் கூறினுர்.

மார்ச் 9.

* லக்ஸ்பிறேயின் விலை 12 ரூபாவினுல் குறைக்கப்பட்டுள்ளது.

* இந்தியப் படையுடன் கப்பலில் தமிழகம் சென்ற தமிழ்த் தேசிய படைக்கு அங்கு தரையிறங்க அனுமதி மறுக்கப் பட்டது.

* இந்திய சுதந்திரப் போராட்ட வீரரும், எழுத்தாளருமான யோகி சுத்தானந்த பாரதி 93வது வயதில் மரணமானுர். கடந்த 25 வருடங்களாக அவர் மௌன விரதம் மேற்கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மார்ச் 10.

* அனுராதபுரம், மலையக நகரங்களில் நாசவேலைகளில் ஈடுபட ஈஎன்டிஎல்எவ் முயல்வதாக அமைச்சர் ரஞ்சன் கூறியுள்ளார்.

மார்ச் 11.

* மாகாண முதல்வர் பெருமாள் இந்திய விமானத்தில் இலங்கையைவிட்டு வெளியேறினர்.

மார்ச் 14.

* திருமலை நகரிலிருந்து இந்திய ராணுவம் வெளியேறியது, தொடர்ந்து புலிகள் நகரத்துக்குள் பிரவேசித்தனர்.

* கல்முனையில் புலிகள் பொலிஸ் மோதலொன்று கடைசி நேரத்தில் தவிர்க்கப்பட்டது.

* கண்டுக்குளி செயற்கை உறுப்பு பொருத்தும் தொழிலகத்தில் ஒன்பது மாதத்தில் 283பேர் பயன் பெற்றுள்ளனர்.

மார்ச் 15.

* கொழும்பு யாழ் புகையிரதம் பளையில் இளைஞர்களால் சோதனை இடப்படுவது நிறுத்தப்பட்டது.

* வடக்கு கிழக்கில் அரச லொத்தர் விற்பனை ஆரம்பிக்கப் படவுள்ளது.

* க.பொ.த உயர்தரப் பரீட்சையில் யாழ் மாவட்டத்தில் 14 மாணவர்கள் 4 பாடங்களிலும் விசேட சித்தி(A) பெற்றுள்ளனர்.

மார்ச் 16.

* இலங்கையிலிருந்து இந்தியப் படையுடன் வெளியேறிய 1335 இலங்கை அகதிகள் ஒரிசா மாநிலத்தில் வைக்கப் பட்டுள்ளனர்.

* 4,500 இந்தியப் படையினரே நாட்டில் எஞ்சியுள்ளதாக அமைச்சர் ரஞ்சன் தகவல் தெரிவித்துள்ளார்.

மார்ச் 18.

* வயல் நீரில் மின்சக்தி உருவாக்கும் முறையொன்றை மத்துகமவைச் சேர்ந்த சமன் பெரேரா என்ற வாலிபர் செய்து காட்டியுள்ளார்.

* ஒற்றையாட்சியின் கீழேயே தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண முடியும் என்று ஐ.ம.வி.மு தலைவர் சித்தார்த்தன் கூறியுள்ளார்.

மார்ச் 19.

* வடக்கு கிழக்கு உட்படப் பல இடங்களிலும் சமாதான யாத்திரை மேற்கொள்ள சர்வோதய இயக்கம் முடிவு செய்துள்ளது.

* தலைமன்னர், மட்டக்களப்பு இரவு ரயில் சேவைகள் ஆரம்பித்தன.

* ஈபிஆர்எல்எவ் உட்பட சகல இயக்கங்களையும் அழைத்து ஜனதிபதி பேச்சு நடத்த வேண்டும் என சித்தார்த்தன் கூறியுள்ளார்.

மார்ச் 20.

* அரச கூட்டுத்தாபன நியமனங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என ஜனதிபதி பிரேமதாசா வலியுறுத்தியுள்ளார்.

* அன்னை பூபதி நினைவாக சுழற்சி முறை உண்ணவிரதம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்பட்டது.

* குவைத்தில் இரண்டரை வருடம் பணிபுரிந்து திரும்பிய, இலங்கையின் முதலாவது எய்ட்ஸ் கர்ப்பிணி பிரசவத்துக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

மார்ச் 21.

* பாணந்துறை மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகள் 25ஆயிரம் ரூபாய்க்கு வெளிநாட்டவர்களுக்கு விற்கப் பட்டதாகச் செய்தி வெளியாகியது.

* ஈரோஸ் பா.உ ரத்தினசபாபதி தனிப்பட்ட காரணங்களுக்காகப் பதவி விலகினர்.

* மாத்தறையில் இனந்தெரியாத 15பேரின் துண்டிக்கப்பட்ட தலைகள் கிடந்தன.

* ஒரிசா அகதிகள் முகாமில் இருந்து 800பேர் தப்பி ஓடிவிட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மார்ச் 24.

* இந்திய அமைதிப் படை இலங்கையைவிட்டு முற்றாக வெளியேறியது.

* மாகாண முதல்வர் பெருமாளுக்கு அரச பாதுகாப்பு வழங்க வேண்டும் என அத்தாவுட செனிவிரத்ன (பா.உ, ஐ.சோ.மு) கேட்டுள்ளார்.

மார்ச் 25.

* இந்தியப் படை வெளியேற்றம் தமிழ் மக்களின் மன வலிமைக்கும், மண்பற்றுக்கும் கிடைத்த வெற்றி என மாத்தயா கூறியுள்ளார்.

* கொழும்பில் இரு தமிழ் வாலிபர்கள் ஆயுதங்களுடன் கைதாகினர்.

* இலங்கைக் கடற் பிராந்திய எல்லைக்குள் வரவேண்டாம் என இந்திய மீனவர்களை விடுதலைப் புலிகள் எச்சரித்தனர்.



www.tamilarangam.net

www.tamilarangam.net






## பாகிஸ்தான் இந்தியா

* இந்திய மாநிலமான காஷ்மீரில் பதட்டம் ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து இந்தியாவும் பாகிஸ்தானும் எல்லைப்புறத்தில் படைகளைக் குவித்து வைத்துள்ளதுடன் போருக்குத் தயார் என இரு நாடுகளுமே அறிவித்துள்ளன.

இருநாடுகளுக்கு இடையேயும் சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்கா, சோவியத் யூனியன் முயன்றுவரும் அதேவேளை காஷ்மீரில் தீவிரவாதிகளைத் தேடியழிப்பதில் இந்தியத் துருப்புகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

## சிம்பாப்வே

* சிம்பாப்வே நாட்டில் நடைபெற்ற தேர்தலில் ஆளுங்கட்சி வேட்பாளரான ரொபாட் முகாபே சுமார் 78% வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரை எதிர்த்து போட்டியிட்ட எதிர்க்கட்சி வேட்பாளரான ரெகரே 16% வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது. பிரித்தானிய சாம்ராச்சியத்தில் இருந்து கடைசியாக விடுபட்ட நாடு சிமபாப்வே (ரொடீசியா) என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## லெபனன்

* கடந்த பலவருடங்களாக உள்நாட்டு யுத்தத்தில் சிக்குண்டிருக்கும் லெபனனில் கடந்த மாதம் நடைபெற்ற கிறிஸ்தவ இராணுவத்துக்கும் சிரிய ஆதரவு புரட்சி கெரில்லாக்களுக்கும் இடையேயான மோதலில் 53 பொதுமக்கள் இறந்தும் 133பேர் கடுங் காயத்துக்கு உட்பட்டும் உள்ளனர். தாக்குதல்களைத் தொடர்ந்து ஆயிரக் கணக்கான மக்கள் கிழக்கு பெய்ரூட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

# சுழலும் உலகின் செய்திச் சுவடுகள்

## போல்டிக் குடியரசுகள்

* சோவியத்தின் போல்டிக் குடியரசுகளான லத்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா ஆகியவை தமக்குள் அரசியல் ரீதியில் ஒத்துழைக்க இணங்கியுள்ளன. சோவியத் யூனியனில் இருந்து இவை தனிநாடாகப் பிரகடனம் செய்யும் முயற்சியில் முன்னேற முடியாதவாறு சோவியத் யூனியன் இவற்றின் மீது பொருளாதார அரசியல் தடைகளை விதித்து வருகிறது.

## வியட்நாம்

* கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டுவரும் மாற்றங்களால் அங்கு பணிபுரியும் வியட்நாமியர் இரண்டு லட்சம் பேர் வேலை இழந்து நாடு திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களில் ஐயாயிரம் பேர் ஏற்கனவே மேற்கு நாடுகளுக்குச் சென்று அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். கிழக்கு ஐரோப்பாவில் கட்டிட நிமாணம், புடவைக் கைத்தொழில் ஆகிய துறைகளில் பணிபுரியும் வியட்நாமியர்கள் தமது நாட்டுக்கு அனுப்பும் அன்னியச் செலாவணியிலேயே வியட்நாமின் பொருளாதாரம் பெரிதும் தங்கியுள்ளது. இதேவேளை மேற்கு ஜேர்மனியுடன் கிழக்கு ஜேர்மனி இணைவதால் தாம் வேலை இழக்க நேரிடும் என்று அஞ்சும் கிழக்கு ஜேர்மன் தொழிலாளர்கள் இந்நிலை ஏற்படாது தடுக்க வேண்டும் என ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்த கால நிகழ்வுகள்

-தவா-



நாஸிகளின் கரம் நோர்வேயில் பதிந்து ஐம்பது வருடங்கள் ஏப்ரல் மாதம் 9ம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ளது.

நோர்வேயில் தற்போது வாழும் 27லட்சம் பேர் போர்க்கால அனுபவங்கள் எதுவும் தெரியாதவர்கள். இந்தப் படையெடுப்பிற்கு 58 போர்க் கப்பல்களும், 8850 விசேட தரைப் படையினரும் அனுப்பி வைக்கப்பட்டனர். இவற்றுடன் பலநூற்றுக் கணக்கான போர் விமானங்களும் பயன்படுத்தப்பட்டன. முதல் தாக்குதலில் 15ஆயிரம் பேர் பயன்படுத்தப் பட்டனர். அடுத்த கட்டத்தில் 1லட்சத்து 15ஆயிரம் பேர் தாக்க ஏற்பாடாகியிருந்தது.

ஒஸ்லோவில் இருந்த நாஸி ஆதரவாளரான டுர்ட் டிருவருக்கு இரகசியமாக பேர்லினில் இருந்து அனுப்பப்பட்ட கடிதத்தில் படையெடுப்பிற்குரிய ஆயத்தங்களில் உதவுமாறு பணிக்கப்பட்டிருந்தது. அதில் ஏப்ரல் 9ம் திகதி நோர்வே, ஜேர்மன் நேரப்படி அதிகாலை 4.15க்கு நாஸிப் படையினர் ஒஸ்லோ, கிறிஸ்டியான்சாண்ட், பேர்கன், துரோணியம், நார்விக் ஆகிய இடங்களில் இறக்கப் படுவர் எனக் குறிப்பிடப் பட்டிருந்தது. ஐந்து நிமிடம் கழித்து அவர் நோர்வே அரசிடம் 13 நிபந்தனைகளை விதிக்க வேண்டும், அதன் சாராம்சம் என்னவெனில் ஜேர்மன் நாஸியினர் அதிகாரத்தைக் கைப்பற்றிவிட்டனர் என்பதாகும்.

நேசநாடுகளான பிரான்சும், பிரிட்டனும் நார்விக் துறைமுகத்தை, ஜேர்மனியைத் தாக்குவதற்குப் பொருட்கள் வழங்கும் தளமாகப் பயன்படுத்தலாம் என்ற ஜேர்மனியின் அச்சமே நோர்வே மீதான படையெடுப்பிற்கு முக்கிய காரணமாகும்.

நோர்வேயைத் தாக்குவது மிக இலகுவானதாகவே கருதப்பட்டது. நோர்வேயின் கடலோரப் பகுதிகளை போர்க் கப்பல்கள் அனுப்பிக் கைப்பற்றி படைகளை இறக்கி, முக்கிய அதிகாரிகளை மக்கள் விழித்தெழ முன்பே நியமனம் செய்வதும் திட்டமாக இருந்ததெனினும் இத்திட்டம் இலகுவாக இருக்கவில்லை.

நோர்வே கடற்படையின் தாக்குதலாலும், வடகடலில் இங்கிலாந்தின் கப்பல்கள் நடமாடியதும் நோர்வேக் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றுவது இலகுவாக இருக்கவில்லை. எனினும் பலத்த எதிர்ப்பிடையே நோர்வேயின் முக்கிய நகரங்கள் சில நாஸிப் படைகளிடம் வீழ்ந்தன. நோர்வே அரசர் தப்பிவிடாது கண்காணிக்கும் பொறுப்பு இங்கிருந்த நாஸி ஆதரவாளர்களிடம் விடப்பட்ட போதும் அரசர் பாதுகாப்பான இடத்துக்கு முக்கிய அதிகாரிகளுடன் தப்பி ஓடிவிட்டார். இவர்கள் பின்னர் 'தாய்நாட்டு முன்னணி' என்ற கெரில்லா அமைப்பை அமைத்து நாஸிப் படைகளுக்கு எதிரான போராட்டத்தை நடத்தினர். போர் தீவிரம் அடையவே மன்னர் இங்கு இருக்க முடியாத நிலை ஏற்பட்டது. அவருக்கு சுவீடன் தஞ்சமளித்தது.

நோர்வேயில் ஹிட்லரின் நாஸிப் படைகள் அணுகுண்டை தயாரிக்க உதவும் துணைப் பொருட்களில் ஒன்ருன 'பாரநீரை'த் தயாரிக்கும் தொழிற்சாலையைக் கைப்பற்ற விரும்பின. றியூக்கனில் அமைந்திருந்த இத் தொழிற் சாலையில் இருந்து பாரநீரை ஜேர்மனிக்குக் கொண்டு சென்று அணுகுண்டு தயாரிக்க அவர்கள் எண்ணிய போதும் நோர்வே மக்களின் வீரம் செறிந்த போராட்டம் இது நிகழாது தடுத்துவிட்டது. ஒருவேளை அவ்வாறு தொழிற்சாலை கைப்பற்றப்பட்டு ஜேர்மனி அணுகுண்டு தயாரித்திருப்பின் அதன் பலம் பெருமளவு அதிகரித்திருக்கும். இதனுல் உலக வரலாறு வேறு விதமாக மாறியிருக்கக் கூடும். நோர்வே தேசியவாதிகளால் இந்தத் தொழிற்சாலை 1943 பெப்ரவரியில் முற்ருக அழிக்கப்பட்டது. இத்தாக்குதலில் 500கிலோ கிராம் பாரநீர் அழிக்கப்பட்டது.

அக்காலப் பகுதியில் நோர்வேயில் வாழ்ந்த 531 யூத மக்கள் நாஸிப் படைகளால் கைதாகி, நச்சு வாயுக்



எல்வரூம் நகரின் மத்திய பகுதி குண்டுவீச்சின் பின்னர்- ஏப்ரல் 11, 1940

www.tamilarangam.net



குதங்களுக்குப் பலியிடுவதற்காக போலந்து நாட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் 12பேர் மட்டுமே யுத்த முடிவில் நாடு திரும்பினர்.

யுத்தத்தின் கோரத்தை இன்றைய தலைமுறையினரும் அறியும் விதத்தில் யுத்த நினைவுச் சின்னங்கள் பலவும் இதற்கென அமைக்கப்பட்ட நூதனசாலைகளில் வைக்கப்பட்டுள்ளன.




றியூக்கனில் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட பாரநீர்த் தொழிலகம்



சுதந்திரமான நாட்கள், காள்யோஹான் வீதி- மே 1945




யுத்த காலத்தில் பால் வாங்க வரிசையில் நிற்கும் மக்கள்.- ஒஸ்லோ



ஹிட்லரின் படைகளை எதிர்த்துப் போராடிய நோர்வேயின் தேசிய வீரர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். துறொண்ணியம் 1943 வசந்த காலம், இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் 366 பேர், கைதானபின் தற்கொலை செய்து கொண்டவர்கள் 144பேர்

www.tamilarangam.net



# நாற்சந்தி

வெளிநாடுகளிலும் நம்மவர்களது பத்திரிகைச் சுதந்திரம் பறிக்கப்படும் செய்திகேட்டு மிகவும் கவலையடைந்தேன். இலங்கையில் 83ஆம் ஆண்டு 'சுதந்திரன்', 'சற்றடே றிவியூ' போன்ற பத்திரிகைகளை தடைசெய்தும், பத்திரிகைத் தணிக்கைமூலம் தமிழர்கள் ஒடுக்கப்படும் செய்திகள் வெளிவராமல் உண்மைகளை அமுக்கியும் பத்திரிகைச் சுதந்திரத்தைக் குழிதோண்டிப் புதைத்தது ஸ்ரீலங்கா அரசு.

அனுல் இவை எல்லாவற்றையும் எதிர்த்து தமிழர்களது சுதந்திரத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் போராடப் புறப்பட்ட 'அமைப்புகள்' அவற்றுக்கு எதிராக தாமும் ஜனநாயக விரோதிகள்தான் எனப் புறப்படுவது புதிராகவும் வேதனையாகவும் உள்ளது. இலங்கையரசின் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, இந்திய சார்பாளர்களால் சில பத்திரிகைகள் தடை செய்யப்பட்டதுடன், பத்திரிகையாளர்களும் அவர்களது உறவினர்களும் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து இன்று சுதந்திரக் காற்று சுவாசிக்க வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர்கள் இதேபோல் பிரச்சனைகளை வெளிநாடுகளில் எதிர்நோக்குவது மிகவும் வேதனைக்குரியதே.

பத்திரிகைகளை தடைசெய்வதானது தமது தவறுகளை மூடி மறைப்பதாகவே பொருள்படும். இதைப் பலநாடுகளிலுள்ள பாசிசவாதிகளும் பிற்போக்கு அரசுகளும் செய்ததுடன் செய்துகொண்டும் இருக்கின்றன. எனவே வெளிநாடுகளில் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களது 'உண்மை' நிலைபற்றி மக்கள் விழிப்பாக சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். பத்திரிகைகளால் மட்டுமே மக்களின் உண்மையான ஜனநாயகத்தை மீட்டுத் தரமுடியும்.

– துரை. செல்வம் –
(டென்மார்க்)



அமெரிக்க நடிகை பவுலத் குடார்ட் 84 வயதில் சுவிஸ்லாந்தில் காலமானுர். இவர் 1936ல் பிரபலமான 'மொடேண் ரைம்ஸ்' படத்தில் சார்லி சப்ளினுடன் நடித்தார். இது அவருக்குப் பெரும் பிரபலத்தைத் தேடித் தந்தது. பின்னர் சார்ளி சப்ளினின் சிறந்த படைப்பான 'சர்வாதிகாரி' (The Dictator) படத்திலும் பங்கேற்ருர். ஹிட்லரைக் கேலி செய்து தயாரான இந்தப் படத்தால் சப்ளின் பல பிரச்சனைகளை எதிர் நோக்க வேண்டியிருந்தது. இப்படம் தயாரான காலகட்டத்திலேயே இருவரும் திருமணம் புரிந்தனர்.

www.tamilarangam.net



# பயணிகளின் உயிரிழப்புக்கு மனநோயாளி காரணமா?

நோர்வே, டென்மார்க் நாடுகளுக்கிடையில் உல்லாச பிரயாண சேவையில் ஈடுபட்டுவந்த "SCANDINAVIAN STAR" என்ற உல்லாசப் பிரயாணக் கப்பல் சித்திரை மாதம் 7ஆந் திகதி அதிகாலை தீவிபத்துக்கு உள்ளாகியது. 500இற்கும் மேற்பட்டோர் பிரயாணஞ் செய்த இக்கப்பலில் விபத்தின்போது 161 பிரயாணிகள் உயிரிழந்தனர். நாட்டில் நிலவிய சீரான காலநிலையால் 'போஸ்க' (Easter) திருநாட்களைச் சிறந்த முறையில் கொண்டாடக் காத்திருந்த பலர், நடைபெற்ற விபத்தால் தமது உற்ருர் உறவினர் நண்பர்களை இழந்து துயரநிலைக்கு உள்ளாகினர். நோர்வேயின் வரலாற்றில் அண்மைக் காலமாக இடம்பெற்ற விபத்துகளில் இவ்விபத்தே மிகவும் கோரமான விபத்தெனக் கருதப்படுகிறது.

சுவீடன் நாட்டின் கடற்பிராந்திய எல்லைக்குள் நடைபெற்ற இவ்விபத்தின் சூத்திரதாரி ஒரு மனநோயாளியென சந்தேகிக்கப் படுகிறது. விபத்தில் சிக்கி உயிர்தப்பிய பிரயாணிகளிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையின் பின் இம்முடிவிற்கே வரக்கூடியதாக உள்ளது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார் குற்றப் புலனுய்வுத் துறை அதிகாரி ஒருவர். தீ ஏற்படுவதைப் பார்த்து சந்தோசமடையும்/ பரவசமடையும் ஒரு வகையான மனநோயால் பீடிக்கப் பட்டவராலேயே தீ மூட்டப் பட்டிருக்கலாம் எனத் தாங்கள் சந்தேகப்படக் காரணம் கப்பலின் நாலு வெவ்வேறு பகுதிகளில் குறுகியகால இடைவெளிக்குள் தீவிபத்து ஏற்பட்டுள்ளதுடன் தற்செயலாகவோ அல்லது திட்டமிட்டோ தீ விபத்து ஏற்பட்டுள்ளது எனக் கருத வலுவான காரணங்கள் இல்லை எனக் குறிப்பிட்டுள்ள இவ்வதிகாரி விசாரணை இன்னும் முடிவடையாத நிலையில் சரியான காரணங்களைத் தன்ஞல் தெரிவிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்ரியான்சாண்ட் மற்றும் பிரெடரிக்ஸ்ஹாவ்ன் துறைமுகங்களுக்கு இடையில் நடைபெறும் இக் கப்பல் சேவையில் பெரும்பாலும் குழந்தைகளுடன் உல்லாச விடுமுறையைக் கழிப்போரும் மலிவுவிலையில் பொருட்களை கொள்வனவு செய்யச் செல்வோருமே அதிகம். இவ்விபத்தில் கப்பலின் கீழ்த் தளத்திலிருந்த பிரயாணிகளே பெருமளவில் இறந்துள்ளனர். 16வயதுக்கு உட்பட்டோரில் சுமார் 20பேர்வரை உயிரிழந்ததுடன் இத்தாலி, பிரித்தானியா, டென்மார்க், நோர்வே ஆகிய நாட்டவர்கள் உயிரிழந்தவர்கள் பட்டியலில் அடங்குகின்றனர். உயிரிழந்த மொத்தம் 161பேரில் 2/3பகுதியினர் ஒஸ்லோ வாசிகளாவர்.

நடைபெற்ற விபத்தைத் தொடர்ந்து கப்பல் அதிகாரி (Captain), கப்பல் ஓட்டுநர், இயந்திரப் பொறுப்பதிகாரி மற்றும் கப்பல் கம்பனி ஆகியன தொடர்பு சாதனங்களின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

கப்பல் விபத்துக்கள் தொடர்பாக மரபுரீதியாக கடைப் பிடிக்கப்பட்டு வரும் ஒழுங்கு முறைகளை கடைப்பிடிக்காமல் கப்பல் அதிகாரி கப்பலைவிட்டு

www.tamilarangam.net



வெளியேறியது மட்டுமன்றி, உதவிக்கு விரைந்த 'Saga' என்ற கப்பலுக்கு 'ஒருவாது உயிருக்கும் ஆபத்தில்லை' என்ற தவறான தகவலையும் தெரிவித்திருந்தார். மற்றும் இயந்திர பொறுப்பதிகாரியோ (ஜேர்மனியர்), ஓட்டுனரோ (போர்த்துக்கீசர்) தீ பரவும் வேகத்தை குறைக்கும் முகமாக கப்பலின் திசையை மாற்றவில்லை எனவும் தீயணைப்பு அதிகாரி போதிய பயிற்சி பெற்றிருக்கவில்லை என்பதுடன் திறமையற்றவராக இருந்தார் எனவும் குறிப்பிடப் படுகிறது. கப்பல் ஓட்டுனர் உட்பட பெரும்பாலானோர் போர்த்துக்கீசர் எனவும் இவர்களுக்கு நோர்வேஜிய மொழியில் போதிய தேர்ச்சி இன்மையால் கப்பலுக்குள் தகவல் பரிமாற்றம் மோசமான நிலையில் இருந்ததாகவும் பலரும் என்ன நடக்கிறது என்று தெரியாமலேயே உயிரிழந்தனர் எனவும் கூறப்படுகிறது. தகவல் பரிமாற்றம் திருப்திகரமாக இருந்திருப்பின் பெருமளவு உயிரிழப்புகளைத் தவிர்த்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

விபத்துப் பற்றி கப்பலின் வானொலி செய்தி கிடைக்கப் பெற்றதும் பல இடங்களில் இருந்தும் உதவிக்கு கப்பல்கள் விரைந்ததுடன் சுவீடனிலிருந்து விரைந்த தீயணைப்புக் கப்பல்கள் தீயைக் கட்டுப்பாட்டுள் கொண்டுவர எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. சுமார் 343பேரைக் காப்பாற்ற முடிந்த போதும் 161பேர்வரை உயிரிழந்துள்ளனர். சுவீடன் நாட்டுத் தீயணைப்புப் படையின் தவறான அணுகுமுறையே தீ வேகமாகப் பரவக் காரணம் என "ஞாயிறு பத்திரிகை" (ஒஸ்லோவில் மட்டும் வெளியாகும்) செய்தி வெளியிட்ட போதும் இது உண்மையல்ல என்று ஏனைய தொடர்பு சாதனங்கள் தெரிவித்துள்ளன. விபத்துப் பற்றிய சரியான அறிக்கை விரைவில் வெளியிடப்படுமென இதுபற்றி தீவிர விசாரணை மேற்கொண்டுவரும் நோர்வே குற்றப் புலனாய்வுத் துறைத் திணைக்களம் அறிவித்துள்ளது●

– ஆஞ்சனேயர் –
(14.04.90)

---

1990ஆம் ஆண்டு சித்திரை மாதம் நோர்வேயைப் பொறுத்தவரை மிகவும் துரதிர்ஸ்டமான மாதமாகும். இம்மாதம் 7ஆந் திகதி இடம்பெற்ற கப்பல் தீவிபத்தில் 161பேர் பலியாகினர். அடுத்து ஒரு கிழமைக்குள் பயிற்சி விமான விபத்தில் 5பேர் உயிரிழந்தனர். 16ஆந் திகதி இடம்பெற்ற இரயில் விபத்தில் 5பேர் உயிரிழந்ததுடன் 54பேர் கடுங் காயமுற்றனர். அதேதினம் இடம்பெற்ற கார்விபத்தில் 3பேர் உயிரிழந்தனர்.

ஈஸ்டர் பண்டிகை காலத்தில் துரதிர்ஷ்ட சம்பவங்கள் நிகழ்வதாக நோர்வே நாட்டு மக்களிடையே ஒரு நம்பிக்கையுண்டு.

---

மூன்று சிறுமிகள் பேசிக் கொண்டனர்

முதல் சிறுமி: நாங்கள் அப்பா அம்மா விளையாட்டு விளையாடுவமா?

இரண்டாவது சிறுமி: நான் அப்பா, நீ அம்மா

மூன்றாவது சிறுமி: அப்போ நான்

முதல் சிறுமி: நீதான் எங்களுக்கு விவாகரத்து வழங்கும் வழக்கறிஞர்

சஞ்சிகை ஒன்றிலிருந்து: சஞ்சயன்

www.tamilarangam.net






# நன்றி; மீண்டும் வரவேண்டாம்

## அம்பரசன்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அயல் நாடொன்றை இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ பிளவடைய வைப்பதன் மூலம் அவற்றைப் பலவீனப்படுத்தி தனது ஆதிக்கத்தினுள் கொண்டுவருவதே இந்திய ராஜதந்திரத்தின் பொதுவான நோக்காக இருந்தபோதிலும், இலங்கையில் இத்தத்துவத்தைப் பிரயோகிப்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

இலங்கைத் தமிழரின் பிரிவினைக் கொள்கையை ஆதரிப்பதன் மூலம் தனது மாநிலமான தமிழ்நாட்டில் இன்னும் சூடாறிப் போகாத பிரிவினைக் கோரிக்கையை உசுப்பிவிட நேரிடும் என்பதே இந்தியாவின் பயத்துக்குரிய பிரதான காரணமாக இருந்தது. இலங்கைப் பிரச்சனையில் தமிழருக்குப் பதிலாக முஸ்லிம்களோ பறங்கி இனத்தவரோ தனிநாடு கேட்டுப் போராடியிருப்பின் சிலவேளை இப்போது இந்தியாவின் ஆசியுடன் இலங்கை பிரிக்கப் பட்டிருக்கக் கூடும். இந்திய உதவியுடன் கிழக்குப் பாகிஸ்தான் பிரிந்து பங்களாதேசாக உருவான போது இந்திய மாநிலமான மேற்கு வங்கத்தில் இந்தியாவை அச்சமூட்டக் கூடிய வகையில் 'தனிநாட்டுக் கோரிக்கை' இருக்கவில்லை. மேலும் வங்காளிகளாக இருந்தபோதும் மேற்கு வங்கத்தினருக்கும் கிழக்கு பாகிஸ்தானியருக்கும் இடையே பாரம்பரிய மதவிரோதம் வேரூன்றியிருந்ததால் இப்போதும், எதிர்காலத்திலும் மேற்கு வங்கத்தில் 'தனிநாட்டுக் கோரிக்கை' எழுவது எதிர்பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. இக்காரணங்களால் கிழக்குப் பாகிஸ்தானைப் பிரித்து வங்காள தேசமாக்குவதில் இந்தியாவுக்கே லாபம் அதிகமாக இருந்தது. ஆனால் இலங்கையைப் பிரிக்கும் முயற்சி தனது 'முதலுக்கே நட்டம்' தரும் என்பது இந்தியாவின் நியாயமான அச்சமாக இருந்தபடியால் இலங்கையைப் பிரிக்கும் முயற்சியை- அதாவது தமிழருக்காக இலங்கையைப் பிரிக்கும் முயற்சியை- இந்தியா நிரந்தரமாகவே கைவிட்டுவிட்டது.

ஜே.ஆரைப் பொறுத்தவரையில் இந்தியா தமிழருக்காக இலங்கையைப் பிரிக்க முடியாது என்பதைத் தெளிவாக அறிந்திருந்தார். ஆனால் தனது நிர்வாகத்தையும், நாட்டையும் சீர்குலைக்க ஈழப் போராளிகளூடாக இந்தியா தொடர்ந்து செயற்படும் என்பதும் அவருக்குத் தெரியும். எனவே இந்தியாவுக்கும் ஈழப் போராளிகளுக்கும் இடையிலான தொடர்பைத் துண்டித்துவிட்டால் இந்தியாவைச் செயல் இழக்கச் செய்துவிடலாம் எனக் கருதினார். போராளிகளுடன் பேச்சு நடத்துவதன் மூலம்

www.tamilarangam.net



பிரச்சனையைத் தீர்த்துவிட்டால் இந்தியாவின் தலையீட்டுக்கு ஒரு வெளிப்படையான தேவையின்மையை ஏற்படுத்தி விடலாம் என ஐ.தே.க. அரசு கருதியது. தீர்க்கப்படாது இருக்கும் மலையக மக்களின் பிரஜாவுரிமைப் பிரச்சனையைச் சாட்டாகக் கொண்டு இந்தியத் தலையீடுகள் ஏற்படலாம் என்று கருதி, அவ் விவகாரத்தின் தீர்வினை முன்வைத்துப் பாராளுமன்றத்தில் பேசிய பிரதமர் பிரேமதாசா "புண்ணைக் குணப்படுத்தா விட்டால் ஈக்கள் வருவதைத் தடுக்க முடியாது" என்ற பொருள்படக் குறிப்பிட்டது நமக்குத் தெரியும். ஆனால் மலையக மக்களின் பிரச்சனைக்குத் தீர்வினை முன்வைத்தது போல் ஈழப் பிரச்சனைக்கு ஒரு திருப்தியான தீர்வினை முன்வைக்க முடியவில்லை. அதனால் திம்பு, புதுடில்லி, கொழும்பு பேச்சுவார்த்தைகள் குழம்பின. இந்தியா- போராளிகள் 'தொடர்பினை' அரசியல் ரீதியாகத் துண்டிக்கும் முயற்சி வெற்றி பெறுததால் பௌதீக ரீதியாகத் துண்டிக்கும் முயற்சியில் இலங்கை அரசு இறங்கியது. இந்தத் 'தொடர்புக்கு' காரணமான '(தமிழக) வேதாரணியம்- வடமராட்சி' போக்குவரத்தைத் தவிர்ப்பதன் மூலம் திட்டத்தை செயற்படுத்தும் பிரதான நோக்குடனேயே இலங்கை ராணுவத்தின் 'Operation Liberation' அரங்கேற்றப் பட்டது. ஆனால் அத்தாக்குதல் காரணமாக ஆயிரக் கணக்கில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பல நூற்றுக் கணக்கான வீடுகள் தரை மட்டம் ஆக்கப்பட்டன. எதையோ நினைத்து இலங்கை அரசு வெட்டிய கிணற்றில் இருந்து உணவுப் பொதிகளைக் காவியபடி ஒரு பெரிய பூதம் கிளம்பியது.

பிளவொன்றினை ஏற்படுத்தாமலேயே இலங்கையை 'மடக்கும்' உபாயம் ஒன்று இந்தியாவுக்குத் தேவைப்பட்டது. ஆனால் தமிழர் பிரச்சனைக்கு அப்பால் சென்று ஒரு 'காரணத்தைத்' தேடுவது இந்தியாவால் முடியாததால் தமிழர் பிரச்சனையையே 'காரணமாக' பயன்படுத்த முடிவாயிற்று. எனவே (1) தமிழர் பிரச்சனை தொடர்பாக இலங்கை துண்டாடப்படும் என இலங்கை அரசு பயப்பட வேண்டும். (2) ஆனால் உண்மையிலேயே இலங்கை பிரிந்து விடவும் கூடாது. இவ்வாறு ஒன்றுக் கொன்று முரணான இரண்டு திட்டங்களைச் செயற்படுத்த வல்ல தந்திரோபாயம் ஒன்றினைத் தெரிவு செய்வதில் இந்திய ராஜதந்திரிகள் ஈடுபடுத்தப் பட்டனர். இந்திய ராஜதந்திரிகள் என்ன திட்டத்தைத் தீட்டினாலும் அவற்றை இலங்கையில் செயல்படுத்த ஈழப் போராளிகள்தான் தேவைப்பட்டனர். இலங்கை ராணுவமோ அல்லது ஜே.வி.பி.யோ இந்தியாவின் தேவைக்குப் பயன்படும் விதத்தில் இருக்கவில்லை. எனவே இந்தியாவின் திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கம் முற்றாக ஈழப் போராளிகளிலேயே தங்கியிருந்தது. அவ்வாறாயின் இந்திய ராஜதந்திரிகளின் உத்தரவைப் பெற்று, கேள்வி கேட்காமலேயே அவற்றைச் செயற்படுத்தவல்ல ஈழப் போராளிக் குழுக்களினால் மட்டுமே இந்தியத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட முடியும். அத்தகைய இயக்கங்களை உருவாக்குவது, அல்லது உருவாகியிருந்த இயக்கங்களை தமது தேவைகளுக்கேற்ப உருமாற்றுவதே இந்திய ராஜதந்திரிகளின் முதல் பணியாக இருந்தது.

ஏற்கனவே இயக்கங்களுக்கிடையே புகைந்து கொண்டிருந்த விரோதத்தை ஊதிப் பெரு நெருப்பாக்குவதில் இந்திய ராஜதந்திரிகளுக்கு எதுவித சிரமமும் இருக்கவில்லை. எல்லா இயக்கங்களுமே இந்தியாவைத் தாம் பயன்படுத்திக் கொள்ள நினைத்துச் செயற்பட்ட அதேவேளை இந்தியாவோ எல்லா இயக்கங்களையும் தான் பயன்படுத்திக் கொள்ள நினைத்தது.

www.tamilarangam.net



இந்த 'விளையாட்டில்' மொத்தத்தில் வென்றது இந்தியாதான். முன்வரிசை இயக்கங்களில், விடுதலைப் புலிகள் தவிர, ஏனைய குழுக்களை இந்தியா வென்றது என்றே குறிப்பிடவேண்டும். இந்தியா சார்பாக இந்த விளையாட்டை விளையாடிய 'ரோ'விஞல் மிகச் சிறந்த ராணுவக் கட்டுக்கோப்பும், கூரிய அவதானமும், நிரந்தர எச்சரிக்கைத் தன்மையும் கொண்ட விடுதலைப் புலிகளின் கோட்டைகளைத் தகர்த்து, அவ்வமைப்பின் தலைமையைத் தன் வழிக்கு திசை திருப்ப முடியாது போயிற்று. அதேவேளை 'நீ பயன்படுத்தக் கூடிய பலத்தை நான் மட்டுமே வைத்திருக்கிறேன்' என்பதனை பல வழிகளில் விடுதலைப் புலிகள் நிரூபித்துக் காட்டவே, விடுதலைப் புலிகள் இயக்கத்தை பௌதீக ரீதியில் அழிக்க வேண்டிய அல்லது பலவீனப் படுத்த வேண்டிய அவசியம் 'ரோ'வுக்கு ஏற்பட்டது. விடுதலைப் புலிகளின் விரோதத்தை ஏற்கனவே வெகுவாகச் சம்பாதித்திருந்த இயக்கங்களை இந்த நோக்கத்துக்காக பயன்படுத்த 'ரோ' எடுத்த முயற்சிகளுக்கு சில இயக்கங்கள் ஆதரவளிக்க மறுத்ததும், சில இயக்கங்கள் உடன்பட்டதும் - அவ்வாறு உடன்பட்ட இயக்கங்களுக்கு ஏற்பட்ட முடிவும் எல்லோருக்கும் தெரிந்த கடந்த கால உண்மைகள்.

இலங்கை தொடர்பான விவகாரங்களின் திட்டமிடல் செயற்படுத்தலுக்கு பொறுப்பாக இருந்தவர்களில் மிக முக்கியமானவர் இந்தியாவின் இலங்கைத் தூதுவர் ஜே.என்.டிக்சிற் ஆவார். பின்னுல் இத்திட்டங்கள் 'டிக்சிற் கொள்கை' (Dixit Doctrine) என அரசியல் விமர்சகர்களால் குறிப்பிடப்படும் அளவுக்கு இலங்கை விவகாரங்களில் செல்வாக்குச் செலுத்தியவர். தனது அண்டை நாடுகள் தொடர்பாக இந்தியாவில் அண்மைக்காலமாக கையாளப்பட்டு வரும் 'அருவருப்பான' கொள்கையினை நடைமுறைப் படுத்துவதில் முன்னின்றவர் இவர். இவர் ஆற்றிய உரையொன்றில் (A Demonstration of Indias Power project- Lanka Guardian, Jan15, 1990) "அயல் நாடுகளான உங்களின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமையின் உங்களை மீண்டும் வழிக்குக் கொண்டு வருவதற்காக உங்கள் அதிகார எல்லைக்குள்ளேயே எம்மை நுழைக்க (உங்களுக்குத் தலையிடி கொடுக்க) முடியும். ...இப்படிச் சொல்வது முரட்டுத் தனமாகத் தெரியலாம். ஆனுல் அப்படியல்ல." என்று கூச்சமின்றிக் கூறிய மனிதர். அதனை மேலும் இலகுவாகச் சொல்லப் போனுல் இந்தியா நினைத்தால், இலங்கைக்கு- இலங்கைக்குள்ளேயே, பாகிஸ்தானுக்கு- பாகிஸ்தானுக்குள்ளேயே, பங்களா தேசத்துக்கு- பங்களா தேசத்துக்குள்ளேயே பிரச்சனைகளை உருவாக்க முடியும். இதையே இவரும் ஏனைய இராஜதந்திரிகளும் இந்தியாவின்

## மன்னிப்புச் சபையின் சாதனை

சர்வதேச மன்னிப்புச் சபையின் நோர்வேக் கிளை கடந்த இருவருட காலத்தில் அங்கத்தவர் தொகையில் சாதனையை நிலைநாட்டியுள்ளது. தற்போது 41ஆயிரம்பேர் இதில்அங்கத்தவர்களாக உள்ளனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இத்தொகை 25ஆயிரமாகும். தற்போது நோர்வே மன்னிப்புச்சபை அரசியல் தஞ்சம் கோருவோருக்கு பலமான ஆதரவு திரட்டிவருகிறது. எமது நாட்டில் எத்தனைபேர் உலக மன்னிப்புச்சபையின் அங்கத்தவர்களாக உள்ளனர்? மூச்!!!

www.tamilarangam.net



'பலத்தின் நிழல்வீச்சு' (Power Projection) என்று கருதினார்கள்.

தனது முழுமையான ஆளுமைக்குள் அகப்பட்டுக் கொள்ள மறுத்த விடுதலைப் புலிகள் மீதான இந்தியாவின் ஆத்திரம் அதனைப் பௌதீக ரீதியில் (ஒப்பந்தத்துக்கு முன்னர்) பலவீனப்படுத்த முடியாது போனமையால் மேலும் அதிகரித்தது. இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் தமிழ்நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவாக்கப்பட்டது.

எவருடைய குறுக்கீடுமின்றி ஈழமண்ணை தமது நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, ஈழம் தொடர்பான சகல பிரச்சனைகளும் பிரபாகரனால் மட்டுமே கையாளப்படக்கூடிய 'ஒரு சூழ்நிலை'யை உருவாக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டு செயற்பட்ட அதேவேளை, பிரபாகரனின் இடத்தில் ராஜீவ் காந்தியைப் பொருத்தும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட்டமை ஒரு 'முசுப்பாத்தியான' விடயம். "இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக நான் தொடர்பு கொள்ள வேண்டிய ஒரே ஒரு நபர் ராஜீவ் காந்திதான்" என்று ஜே.ஆர். உணரக்கூடிய 'சூழ்நிலை'யை உருவாக்க வேண்டுமெனில் ஈழத்தின் மீதான 'சகல நிறைவேற்று அதிகாரங்களுடன்' ராஜீவ் காந்தி இருந்தாக வேண்டும். இதில்தான் டிக்சிற் கொள்கையின் (Dixit Doctrin) வெற்றி தங்கியுள்ளது.

உண்மையிலேயே இது ஒரு சுவாரஸ்யமான விடயம். இலங்கையின் ஜனாதிபதி, தனது நாட்டின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சனையைத் தீர்க்க ஒரு அந்நிய நாட்டுப் பிரதமருடன் பேச்சு நிகழ்த்த வேண்டிய நிலையில் இருந்தார் என்றால் இதுதான் இந்திய ராஜதந்திரத்துக்குக் கிடைத்த வெற்றியாகும். இந்த வெற்றி கிடைக்க வேண்டுமானால் ஈழப் பிரச்சனை தொடர்பான சகல அதிகாரங்களும் ராஜீவ் காந்தியிடம் மட்டும் (ஈழத்தைச் சேர்ந்தவர்களிடம் அல்ல) இருந்தாக வேண்டும். இதில் உள்ள பெரும் சோகம் என்னவென்றால் தமிழ் மக்கள் எந்த மண்ணை மீட்கப் போராடினார்களோ அந்த மண்ணின் மீதான அதிகாரம், அந்த மண்ணைச் சேர்ந்தவர்களிடம் இல்லாது ஒரு அந்நிய நாட்டின் வசமாகி இருந்ததுதான்.

இலங்கையின் முட்டாள்தனமான வடமராட்சித் தாக்குதலை கவனமாக கணிப்பிட்ட இந்திய அதிகாரிகள் இதுதான் சமயமென்று 'தமிழ் மக்கள் ஆயிரக் கணக்கில் இறந்தது கண்டு துடித்துப் போய்' விமானங்கள் மூலம் உணவுப் பொதிகளை ஈழத்தில் வீசினர். ஈழமக்கள் 'இந்தியாவுக்கு இளகின நெஞ்சு பார்த்தாயா' என்று பேசுகையில் ஜே.ஆருக்கு 'உணவுப் பொதிகளுக்குப் பதிலாக குண்டுகளையும் போட முடியும்' என்ற செய்தி வழங்கப் பட்டது. தந்திரம் மிகுந்த ஜே.ஆர். விமானங்கள் மூலம் இந்தியா வாசித்த செய்தியை விளங்கிக் கொண்டார், ஒப்பந்தத்திற்கு ஒப்புக் கொண்டார்.

இந்த ஒப்பந்தத்தினால் இலங்கை அடைந்த நலன்களைவிட இந்தியா அடைந்த நலன்களே ஏராளம். ஆனால் இந்த ஒப்பந்தம் ஏற்படக் காரணமான ஈழத்தின் மீது ஒரு குழப்பமான நடைமுறைச் சிக்கல் நிறைந்த ஒரு மாகாணசபைத் தீர்வு ஈழமக்களைக் கேட்காமலேயே திணிக்கப்பட்டது. இந்திய ராஜதந்திரிகளின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

(1) இலங்கை, அமெரிக்க வானொலிச் சேவைக்கு அனுமதி வழங்காது.

(2) திருமலைத் துறைமுகம் அமெரிக்க தளமாகப் பயன்படாது.

(3) இந்திய ராணுவத்தின் பிரசன்னம்

www.tamilarangam.net



தவிர வேறு ராணுவத்தின் பிரசன்னம் இருக்காது போன்ற முக்கியமான கோரிக்கைகள் உட்பட பல இந்தியக் கோரிக்கைகட்கு இலங்கையை ஒப்புக் கொள்ள வைத்த இந்த ஒப்பந்தம்தான், இந்தியா ஈழத் தமிழர் மீது செய்த முதலீட்டுக்கு (அதாவது- 'உதவிகளுக்கு') கிடைத்த ஒரு லாபமாகும். எனவே இந்த ஒப்பந்தம் பாதுகாக்கப் படுவதன் மூலம்தான் இந்த லாபம் புதுடில்லிக்குப் போய் சேரமுடியும். ஆனால் வெளிப்படையாக இந்தியா ஈழநிர்வாகத்தில் தலையிட்டு அதன்மூலம் ஒப்பந்தத்தைப் பாதுகாப்பது சாத்தியம் இல்லாதபடியால் இந்தியாவுக்குச் சார்பான ஈழ இயக்கங்களைப் பதவியில் இருத்துவதன் மூலம் -தனது செல்வாக்கை நிரந்தரப் படுத்தி- ஒப்பந்தத்தைப் பாதுகாத்துக் கொள்ள இந்தியா திட்டமிட்டது. இந்தியாவின் இந்தத் தேவைக்கு தமது சேவையை வழங்க புலிகளின் விரோத இயக்கங்கள் அணிவகுத்து நின்றன.

இங்குதான் எமது இனத்தின் பரிதாப நிலை வெளிப்படுகிறது. ஒருமுறை யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளர் ஒருவர் இந்திய ராணுவ உயரதிகாரி ஒருவருடன் பேசவேண்டியிருந்தது. ஒரு கட்டத்தில் ஒரு ராணுவ உயரதிகாரி "யாழ்ப்பாண மக்கள் பேராசை பிடித்தவர்கள், சுயநலக் காரார்கள்" என்று கத்தினாராம். அதற்கு அந்த விரிவுரையாளர் "அது முற்றிலும் உண்மைதான். ஆனால் அந்நிய ராணுவமாகிய உங்களால் அதுகுறித்து ஒன்றும் சொல்ல முடியாது." என்று அமைதியாகப் பதிலளித்தார். "புலிகள் பலரைக் கொன்றிருக்கிறார்களே அவர்களை நீங்கள் ஏன் காட்டிக் கொடுக்கவில்லை" என்று ஆத்திரத்துடன் அந்த அதிகாரி கேட்டபோது அதே அமைதியுடன் "அதுவும் உண்மைதான்.. ஆனால் அந்த இயக்கத்தில் இருப்பவர்கள் எனது தம்பியும் மச்சானும் உறவினர்களும். இந்தியர்கள் அல்லவே. எனவே அது எமது சொந்தப் பிரச்சனை, ஆக்கிரமிப்பு ராணுவமாகிய உங்களுக்கு அவர்களை நாம் காட்டித் தருவோம் என்று நீங்கள் நினைப்பது உங்கள் முட்டாள்தனம்" என்று பதிலளித்தார். மறுநாள் அந்த ராணுவ அதிகாரி அப்பிரதேச புலிகளின் பொறுப்பாளருடன் தொடர்பு கொள்ள வேண்டியிருந்தது. எனவே இந்த

## கலிங்கம்

ஹிந்திக் கவிதை

சிறீகாந்த் வர்மா

அசோகன் மட்டும்
வந்தான்
இருந்தவர்கள்
'கலிங்கம் எங்கே'
எனக் கேட்டனர்.

அசோகன் பார்வை
நிலம் நோக்கியது
இருந்தவர்கள்
வெற்றிநடை போட்டனர்.

அசோகன்
செவிக்குள் மட்டும்
அழுகையும் ஓலமும்
எதிரொலித்தன.

அசோகன் மட்டும்
ஆயுதத்தைக்
கீழே போட்டான்.

அசோகன்
மட்டுமே!

தமிழில்: கு.இராமச்சந்திரன்
நன்றி: கொழுந்து

www.tamilarangam.net



விரிவுரையாளருடன் தொடர்பு கொண்டு புலிகள் பொறுப்பாளருடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டார் அந்த அதிகாரி. அதற்கு அந்த விரிவுரையாளரோ "நான் அவர்கள் தொடர்பாக சில விமர்சனங்களைச் செய்திருக்கிறேன். அதனால் அவர்களுக்குப் பயந்து பயந்து வாழ்கிறேன். என்னைப் போய் அவர்களைத் தொடர்பு கொள்ளச் சொல்கிறீர்களே" என்று பதிலளித்தாராம் விரிவுரையாளர். இவர் போலவே இந்திய சார்பு இயக்கங்களும் "புலிகளுடனான விரோதம் நமது சொந்தப் பிரச்சனை.. அதற்காக இந்தியாவிடம் நமது நாட்டைத் தாரை வார்க்கக் கூடாது" என்று தீர்மானித்திருப்பின் வரலாறு மாறியிருக்கும். ஆனால் அவர்களோ ஈழமக்கள் அனைவரும் அழிந்தாலும் பரவாயில்லை, புலிகள் அழிந்தால் சரி என்ற பாணியில் செயற்பட ஆரம்பித்தார்கள்.

விடுதலைப் புலிகள் ஆரம்பத்தில் இருந்து இவ் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவந்தனர். பின்னர் பிரபாகரனையும் முக்கிய உறுப்பினர்களையும் புதுடில்லி அசோகா ஹோட்டலில் வைத்து வற்புறுத்தியதன் பயனாக வேண்டா வெறுப்புடனான ஒரு சம்மதத்தைப் பெற்றுக்கொண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஒப்பந்தம் கைச்சாத்தான சில மணி நேரத்தின்பின் 'India Today' சஞ்சிகைக்கு வே. பிரபாகரன் வழங்கிய பேட்டியில் "இவ் ஒப்பந்தம் முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகும். இது இலங்கை இந்திய நட்புறவு ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. ஆனால் இது தமிழரின் இனப் பிரச்சனையைக் கையாளுகிறது. மேலும் இது தமிழரின் பிரதிநிதிகளைக் கலந்து ஆலோசிக்காமல் உருவாக்கப்பட்டுள்ளது. ..... கடந்த இரவு ராஜீவ் காந்தியுடன் ஒன்றரை மணி நேரம் நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து ஒப்பந்தத்தின் மீதான எமது எதிர்ப்பை நாம் மறுபரிசீலனை செய்துள்ளோம். ஏனெனில் (இப் பேச்சுகளின் போது) எங்களின் தயக்கத்தினைப் பற்றி சிரத்தை கொண்டுள்ளார்.. .... இவ் ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் தமிழர்களின் போராட்டத்தை நசுக்குவதுதான். ...எதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்." (India Today, August15, 1987)



www.tamilarangam.net



விடுதலைப் புலிகளின் ஒப்பந்தத்தின் மீதான எதிர்ப்பு ஒன்றும் ரகசியமானதல்ல. "இந்தியாவின் பூகோள அரசியல் நன்மையின் பொருட்டு தமிழர்கள் பலியாக்கப் பட்டிருக்கின்றனர்" என (India Today,Sep 15, 1987) பிரபாகரனுல் வெளிப்படையாகவே கருத்து முன்வைக்கப்பட்டது. டிக்சிற் குழுவினர் புலிகளினுல் தங்கள் திட்டத்தில் மண்விழும் என்று ஏற்கனவே உணர்ந்திருந்தனர். எனவே ஒப்பந்தம் கைச்சாத்தாகி இந்திய ராணுவம் ஈழத்தில் கால் வைத்த நாளில் இருந்து புலிகள் மீதான மறைமுக பாரபட்சம் காட்டப்பட்டது. புலிகள் விரோத இயக்கங்களைக் கொண்டு புலிகளை அரசியலி ரீதியாகவும் , ராணுவ ரீதியாகவும் அந்நியப்படுத்தத் திட்டமிடப்பட்டது. தங்களுக்கு விசுவாசமாகவும் அதே நேரத்தில் ஈழமக்களின் நலன்களைத் தியாகம் செய்யவும் தயாரான ஒரு தலைமையினை ஊக்குவிப்பதன் மூலம் தங்கள் செல்வாக்கை நிரந்தரப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே மாகாண சபைத் தேர்தல், முதல் அமைச்சராக பெருமாள் தெரிவு, மக்கள் தொண்டர் படை (CVF), தமிழர் தேசிய ராணுவம் (TNA) போன்ற கட்டங்களை நோக்கி இந்தியா வெகு வேகமாக வளர்ந்தது. ராஜீவி காந்திக்கு விருப்பமான முறையில் நடந்து கொள்வதில் மாகாண சபைத் தலைவர் பெருமாள் வெற்றி கண்டார். மேசையில் இருந்த பென்சிலைக் காணவில்லை என்ருலும் டில்லிக்குப் பறக்கும் பெருமாள்தான் இந்தியத் திட்டங்களுக்கு மிகவும் பொருத்தமானவராகத் திகழ்ந்தார். வல்வெட்டித் துறையில் இந்திய ராணுவத்தினர் நடத்திய படுகொலைகளை உலகமே எடுத்துரைத்தது. ஆனுல் "அப்படி ஒன்றும் அங்கே நடக்கவில்லை, இந்தியாவுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தச் சிலரின் திட்டமிட்ட சதி" என்று இந்தியப் பிரதமரோ இந்திய அரசோ கூறவில்லை; எமது முதலமைச்சர் பெருமாள்தான் அவ்வாறு அறிக்கைவிட்டார். 'பிரபாயிஸத்'தில் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு இடமில்லை என்பது உண்மைதான், ஆனுல் அதேவேளை 'பெருமாள்த் தனத்துக்கும்' அதில் இடமில்லை என்பதும் ஒரு முக்கிய உண்மை. "பெருமாள் [redacted]" செய்யப் பிரபாகரன் தயாராக இருந்திருந்தால் மட்டுமே புலிகள்- IPKF மோதல் நிகழாதிருந்திருக்கும். மற்றும்படி IPKF- புலிகள் மோதல் தவிர்க்கப் பட்டிருக்க முடியாது.

(தொடரும்..)

தவிர்க்க முடியாத தொழில் நுட்பக் காரணங்களால் இந்த இதழை எம்மால் குறித்த நேரத்தில் வெளியிட முடியவில்லை. சித்திரை, வைகாசி ஆகிய இரு இதழ்களையும் ஒன்ருக வெளியிட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளோம். இந்நிலையை வாசகர்கள் புரிந்துகொள்வர் என நம்புகிறேும். இந்நிலை, தொடரும் காலங்களில் ஏற்படாது தவிர்க்க முயல்கிறேும். வாசகர்களுக்கு ஏற்பட்ட சிரமத்துக்கு மன்னிக்க வேண்டுகிறேும்.

● சுவடுகள்


www.tamilarangam.net

* அண்மையில் லண்டனில் இருக்கும் ஒருவருடன் எனது நண்பர் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தார். இருவருமே எனக்கு நண்பர்கள் என்பதால் நான் உரையாடலைக் கவனித்துக் கொண்டிருந்தேன். இங்கிருந்து பேசுபவர் சரளமாகப் பேசிக் கொண்டிருக்க மறுமுனையில் இருப்பவர் சிலவேளைகளில் புரிந்து கொள்ளத் தடுமாறியது எனக்குப் புரிந்தது. வேறொன்றுமில்லை. இங்கு நாம் பேசும்போது **Opptatt (Occupied), besøk (Visit)** என்றெல்லாம் தாராளமாக நொஸ்க் வார்த்தைகளை கலந்து பேசுகிறோம். லண்டனில் இருப்பவருக்கு இதெல்லாம் எங்கே புரியப் போகிறது? சிக்கல் என்னவென்றால் தமிழில் நாம் இப்போது கலந்து வைத்திருக்கும் சொற்களுக்குப் பதிலாக சரியான தமிழ்ச் சொற்கள் (ஆங்கிலச் சொற்களாவது) தேவையான நேரத்தில் அகப்படுவது இல்லை. இதனல் தொலைபேசியில் வெளிநாடுகளில் உள்ளோருடன் பேசும்போது பலதடவை சிக்கல் வந்துவிடுகிறது. இங்கிருந்து சுவீடனில், டென்மார்க்கில் உள்ளோரோடு பேசினல் ஓரளவு தப்பலாம். உச்சரிப்பில்தான் கொஞ்சம் வித்தியாசம், மற்றும்படி வார்த்தைகள் பிடிபட்டுவிடும். ஏனைய நாடுகள்தான் பிரச்சனை தருபவை.

ஈழத்தமிழ், இந்தியத்தமிழ் என்று வித்தியாசமாக இருப்பதுபோல ஜேர்மன் தமிழ், நோர்வேத் தமிழ், பிரான்ஸ் தமிழ், கனடாத் தமிழ் என்றெல்லாம் ஏற்படலாம். எனக்கு ஒரு விஷயம் புரியவில்லை. இலங்கையை டச்சுக்காரர்கள், போர்த்துக்கீசர்கள், ஆங்கிலேயர்கள் ஆண்டார்கள். அந்தந்த மொழிகளிலிருந்து சொற்களைக் கடன் வாங்கினேம். இப்போது நாங்களே இங்குவந்து இந்த மொழிகளில் சொற்களைக் கடன்வாங்குகிறோம். முரண்பாடாக இல்லை?

*உலகில் மிகநீளமான கவிதை எனக் கருதப்படும் இராமாயணம் நோர்வே மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு மேடையேற்றப்பட உள்ளது. எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தில் நோர்வே- இந்திய நட்புறவுச் சங்கத்தால் ஹௌகசுண்டில் மேடையேற்றப்பட உள்ளது. இராமாயணம் 24,000 கவிதைகளை உள்ளடக்கியது.

* பேர்கன் நகரில் சூழல் பாதுகாப்புத் தொடர்பான உலக மாநாடு நடப்பது நீங்கள் அறியாததல்ல. இந்த மாநாட்டில் பெரும்பாலான நாடுகளின் கண்டனத்துக்கு ஒருநாடு ஆளாகியது. அது, அமெரிக்கா. சூழல் அச்த்தமாவது பற்றி உலகில் தற்போது எல்லா நாடுகளிலும் பிரக்ஞை ஏற்பட்டு வருகிறது: இதற்கு அமெரிக்காவும், பிரிட்டனுந்தான் விதிவிலக்குப் போல நடந்து கொள்கின்றன. இதைத்தான் மாநாட்டில் எல்லோரும் கண்டித்தார்கள். எல்லா




நாட்டுக்கும் 'ஜனநாயகத்'தைப் போதிக்கும் அமெரிக்கா, எல்லோரும் இந்தப் பூமியில் உயிரோடு வாழவேண்டும் என்பதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சற்று யோசித்தால் என்ன? எங்களிடம் இருப்பது ஒரேயொரு பூமிதான்.


ஒரு வால்செய்தி- அமெரிக்காவில் புகைபிடிப்போரின் புகையைச் சுவாசித்து நுரையீரல் புற்றுநோயால் இறக்கும் மற்றையோரின் எண்ணிக்கை வருடாந்தம் 3800.

* எம்மவருக்கு, தெரியாத விஷயங்களுக்கு எல்லாம் பெயர் வைப்பது கைவந்த கலை. ஒஸ்லோவில் கடையொன்று சிலகாலம் பெயர்ப் பலகை இல்லாமல் இயங்கியது. வியாபார உத்திக்காக இக் கடையின் யன்னல்களில் கேள்விக் குறியைப்(?) போட்டிருந்தனர். அங்கு பொருட்கள் மலிவாக இருந்ததனுல் தமிழர்களை அந்தக்கடை வெகுவாகக் கவர்ந்தது. அந்தக் கடைபற்றி ஒருவருடன் ஒருவர் பேசும்போது தமிழர்கள் வைத்த பெயர் 'கேள்விக்குறிக் கடை'.

ஒஸ்லோவில் மத்தியில் புதிதாக வீட்டுத் தொகுதியொன்று கட்டப் படுவதற்காக சில தூண்கள் எழுப்பப் பட்டிருந்தன. இதைப் பார்த்தபடி பஸ்சில் சென்ற ஒரு தமிழ் நண்பர் மற்றவரிடம் கூறியது, "ஆயிரங்கால் மண்டபம் இருக்குது பார்". இந்த ஆயிரங் கால் மண்டபம் விரைவில் வீடுகளாக வளர்ந்துவிடும்.

* நோர்வேயில் இருக்கும் எங்களுக்கு நோர்வேபற்றி வேறு யாரும் சொல்லித்தான் சிலசமயம் தெரியவருகிறது. அண்மையில் நோர்வேயில் இருந்து சென்ற யுவதி ஒருத்தி உலக அழகுராணிப் போட்டியில் வெற்றி பெற்ருர். இலங்கையில் இருந்து வெளிவரும் 'திசை' பத்திரிகை இந்தப் பெண்ணை 'நரகத்'தில் இருந்து வந்த அழகுராணி என்று வர்ணித்திருந்தது. காரணம் இந்தப் பெண் Hell (நரகம்)என்ற நோர்வே நாட்டின் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவள். Hell என்ற சொல்லைக் கேட்கும்போது வேறு ஒரு விடயம் நினைவு வருகிறது. தென்னுபிரிக்காவுடன் வர்த்தகத் தொடர்புகளை வைத்திருக்கும் நிறுவனம் என்பதால் ஷெல் நிறுவனத்தைப் பகிஷ்கரிக்குமாறு ஒரு கோரிக்கை பரவலாக எழுந்தது. ஒஸ்லோ வீதியொன்றில் ஷெல் எரிபொருள் நிலையத்தின் முன்னுல் சுவரில் எழுதியிருந்த வாசகம் இது; "Shell= Hell"

* ஒஸ்லோவில் இருப்பவர்களுக்கு பொதுவாக பெருமைப் படுவதற்கு ஒன்றும் இல்லை என்று சிலர் சொல்வதுண்டு. ஐரோப்பிய நகரங்களுள் பெரிய நகரமோ அழகான நகரமோ என்று ஒஸ்லோவைப் பற்றி பெருமைப்பட முடியாதுதான், ஆனுல் பலவருடங்களாக 'பெருமை'ப்படக்கூடிய ஒரு விஷயம் இருக்கிறது. ஐரோப்பிய, அமெரிக்க நகரங்களில் செலவுகூடிய நகரமாக ஒஸ்லோ தனது பிடியைத் தளர்த்தாமல் இருக்கிறது. சுவீடன்நாட்டு ஆய்வு நிறுவனமொன்று நடத்திய கணிப்பீட்டின்படி ஈக்குவடோரின் தலைநகர் குயிற்ருே உலகிலேயே செலவு குறைந்த தலைநகராகவும், அதற்கடுத்ததாக ஹங்கேரித் தலைநகர் புடபெஸ்ற்றும் உள்ளன. உலகில் செலவுகூடிய நகரம் தெஹ்ரான், அடுத்தது ரோக்கியோ. ரோக்கியோவில் கடந்த இருவருடங்களாக செலவுகள் குறைந்து வருகின்றன. நியூயோர்க்கைவிட 35% வாழ்க்கைச் செலவு அதிகமாகவுள்ள ஒஸ்லோவை முக்கியமாக குடிவகை, சிகரெட்டின் உயர் விலைகளே 'ஏற்றி' வைத்துள்ளன. இன்னும் 'பெருமை'ப் படக்கூடிய விஷயம், இருவருடங்களுக்கு முன்னுல் உலகின் செலவுகூடிய எட்டாவது நகரமாக இருந்த ஒஸ்லோ ஐந்தாவது இடத்துக்கு வந்துள்ளது.



49

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு வாசகனின் பார்வையில் ஸிமனோவின் ஒரு கவிதை

எனக்காகக் காத்திரு, திரும்பிவருவேன் நான்
காத்திரு, வருவேன் நான்
இலையுதிர்காலத்து மஞ்சள்நிற மழையினூடும்
அதுதரும் சலிப்பினூடும் காத்திரு.
உன் இதயத்தை திடப்படுத்து வருந்தாதே!
பனிக்காலத்தின் மூட்டத்தினூடே காத்திரு
காற்றினூடும் சீறும் சூறாவளியினூடும் காத்திரு.
கோடையின் ஒளிவீச்சினூடே காத்திரு
மற்றவர்கள் இனிமேலும் காத்திராதபோதும்
என் கடிதங்கள் நின்றுவிட்ட போதும்
மங்காத நம்பிக்கையுடன் காத்திரு,
காத்திரு, கைவிடாதே நம்பிக்கையை.

*

எனக்காகக் காத்திரு, திரும்பிவருவேன் நான்.
அன்பே, பொறுமையைக் கற்றுக்கொள்.
நான் திரும்பமாட்டேன் எனச் சொல்பவரிடமிருந்து
நீ விலகி நில்.
என் மகனும் தாயும் துக்கத்தின்
கண்ணீரைச் சிந்தி அழட்டும்
என்னை மறந்துவிட வேண்டியதுதான் என
நண்பர்கள் அடித்துச் சொல்லட்டும்
அவர்களின் அனுதாபச் சொற்களைக் கேட்காதே
என் நினைவுக்காக அவர்கள் குடித்தால்
சேராதே அவர்களுடன்.

*

எனக்காகக் காத்திரு, காத்திராத அவர்கள்
சொல்லட்டும் உன்னுடன் நான் இணைந்தபின்னர்
அதிர்ஷ்டந்தான் நம்மை இணைத்ததென்று
மரணத்தின் ஒவ்வொரு வகையையும் சிதைத்து
அந்தக் கொடும் தீப்பிழம்பினூடே
நான் நலமுடன் வந்தேன் என்பதை
நாமிருவர் மட்டுமே அறிவோம்.
உறுதியோடும் பிடிவாதத்தோடும்
நீ காத்திருக்கக் கற்றதனால்
பூமியில் வேறு எவர்மாதிரியுமின்றி
அன்பே, நீ எனக்காகக் காத்திருந்ததனால் மட்டுமே
நிகழ்ந்தது அது.

["எனக்காகக் காத்திரு" எனத் தலைப்பிட்ட கான்ஸ்டான்டின் ஸிமனோவின் (1915- 1974) இக்கவிதை பல இலட்சம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டு வினியோகிக்கப்பட்டன. 1942 பெப்புரவரியில் நாஜிப் படைகள் மாஸ்கோவிலிருந்து விரட்டியடிக்கப் பட்டபோது "ப்ராவ்தா" நாளேடு வெளியிட்ட இக்கவிதையைப் போர்வீரர்கள் செய்தித் தாள்களிலிருந்து கத்தரித்து எடுத்து, பதுங்கு குழிகளில் பிரதிகளெடுத்து, மனப்பாடம் செய்து, மனைவியருக்கும் காதலிகளுக்கும் எழுதியனுப்பினர். போரில் காயமடைந்தவர்கள் இறந்தவர்களின் சட்டைப்பைகளில் இக்கவிதைகளின் தாள்கள் காணப்பட்டன]

நன்றி: ரஷ்யப் புரட்சி: இலக்கிய சாட்சியம் (எஸ்.வி.இராஜதுரை)

கவிதை- ஆங்கிலத்தில் இருந்து தமிழில்: ஆர்.சிவகுமார்.

www.tamilarangam.net



# போரில் குழந்தைகள்

நோர்வேஜிய மொழியில்- Jan Tystad
(தமிழில்- யோகன்)



இலங்கை குழந்தைகளை ஏற்றுமதி செய்யும் ஒரு சிறந்த தளமாக இன்று விளங்குகிறது. பணவசதி படைத்த அமெரிக்கர்களும் ஐரோப்பியர்களும் அரேபியர்களும் ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து குழந்தைகளைத் தத்தெடுக்கின்றனர். ஆனால் இலங்கையைப் போல் சில நாடுகளில் மட்டும் இதற்கான திறந்த வெளிச்சம் காணப்படுகிறது.

பிள்ளைகளை விற்கும் ஸ்தாபனங்களின் முகவரிகளை அறிய நான் ஆசைப்பட்டேன். அவை எனக்கு சுவீடனில் கிடைக்கப்பெற்றன. சுவீடன் இலங்கையில் இருந்து பல குழந்தைகளைத் தத்தெடுத்த நாடுகளில் ஒன்றுகும். காரணம் இலங்கையில் இருந்து மிகச் சுலபமாக குழந்தைகளை வாங்கலாம். அத்துடன் சுவீடனில் தடுப்புகள் மிகக் குறைவு. ஆனால் நோர்வேயில் யார் குழந்தையைத் தத்தெடுக்க விரும்பினாலும் அவை நோர்வே அரசால் அனுமதி வழங்கப்பட்ட 'barne hjem' எனப்படும் குழந்தைகள் மனைக்கூடாகவே எடுக்கப்படலாம். அத்துடன் குழந்தையை எடுப்பதற்கான அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு பணம் செலுத்தப்படக் கூடாது என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் சுவீடனில் ஒரு குழந்தையைத் தத்தெடுக்க ஏறத்தாழ 50 000 குரோணர்கள் செலவிடப் படுகின்றன. இவற்றுள் பெரும்பகுதி இதில் சம்பந்தப்படும் இடைப்பட்ட மனிதர்களுக்கே போய்ச் சேர்கிறது.

நான் அண்மையில் கொழும்பிலுள்ள "Singithi Meduru Children's Home" ஐ அடைந்தேன். அது மிகவும் அழகான, புதுமையான கட்டடம். வளர்முக நாடுகளுள் என்னைக் கவர்ந்த கட்டடம் அது என்றுகூடச் சொல்லலாம். அந்தக் கட்டடம் கட்டப்பட்டதில் சுவீடனிலுள்ள தத்தெடுக்கும் காரியாலயம் ஒன்றுக்கும் சம்பந்தமுண்டு. அந்தக் கட்டடத்துக்கு அருகிலிருந்த பல ஆண்கள் என்னிடம் வந்து மிகவும் நூதனமான முறையில் நான் என்ன செய்கிறேன்; இங்கே எதற்காக வந்தேன் என்று குடையத் தொடங்கினர். அவர்கள் வேறுயாருமில்லை; அவர்கள் இலங்கையிலிருந்து

www.tamilarangam.net



ஐரோப்பாவுக்கு குழந்தைகளை விற்கும் மிகப் பெரும் புள்ளியான நெயில் நெல்சன் சில்வாவின் (Neil Nelson Silva) காவலர்கள். நான் என்னை ஒரு பத்திரிகை நிருபராகக் காட்டிக் கொள்ளவில்லை. மாருக, எனக்கு குழந்தை வாங்குவதில் ஆவல் உள்ளதாகவும் என்ருல் தகுந்த தொகையைச் செலுத்த முடியும் எனவும் கூறினேன். மிகவும் மெதுவான குரலிலே நான் ஒரு வயதான மாதிடம் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டேன். சுவீடனிலுள்ள குழந்தைகளைத் தத்தெடுக்கும் காரியாலயத்தை எனக்குத் தெரியும் என்று கூறியதுடன் என்னை அந்தப் பெண் உண்மையாக நம்பிவிட்டாள்.

சில்வாவைச் சந்தித்தோம். அவர் என்னை ஒரு கொள்வனவாளராக ஏற்றுக் கொண்டார். நான் பிள்ளைகளைப் படமெடுக்க விரும்புவதாகவும், அவற்றை எனது குடும்பத்தாரிடம் காட்டி யாரை எடுப்பது என்பதுபற்றி தீர்மானம் செய்ய உதவியாயிருக்கும் என்றும் கூறினேன். ஒரு மாதம் நிரம்பிய ஆண் குழந்தையையும் ஐந்து கிழமைகள் நிரம்பிய பெண் குழந்தையையும் பார்வையிட நான் அனுமதிக்கப்பட்டேன். அக் குழந்தைகளின் பெற்ரேர்களிடமும் நான் கதைத்தேன். பணவிபரங்களில் சில்வா தலைபோடவில்லை. ஆனுல் பின்னர் 2300 குரோணர்கள் வழக்கறிஞர்க்கு என்றும் 10,000

---

இலங்கையின் முன்னைநாள் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி சில்வாவுடன் நெருங்கிய தொடர்புடையோரில் ஒருவராவார். இவர் தமிழர்களை பலமாக ஒடுக்குவதில் பங்கேற்றவர் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. மனிதாபிமான அமைப்பான மனித உரிமைகள் மீறல் அமைப்புக்கூட அவரால் ஏவப்பட்ட இராணுவத்தின் 1984 மார்ச்- ஏப்பிரல் அத்துமீறலை கடுமையாக விமர்சித்திருந்தது. இலங்கை 'barns vänner' அவரை "எங்கள் அமைச்சர்" என்றே வர்ணிக்கின்றனர். காரணம் தேர்தல் காலத்தில் இலவசமாக குழந்தைகளுக்குப் பால் விநியோகம் செய்தாராம். சுவீடன் அரசு தற்போது இந்த குழந்தைகள் விற்கும்- வாங்கும் படலத்தை துருவி ஆராய்கிறது.

---

காவலர்கள் என்னை ஒரு காடுபோன்ற இடத்தில் அமைந்திருந்த பங்களாவுக்கு அழைத்துச் சென்றனர். அவர்களது பங்களாவுக்கு முன்ஞலேயே குழந்தைகள் மனையும் அமைந்திருந்தது. அந்த பங்களா மிகவும் நேர்த்தியான முறையிலே கட்டப் பட்டிருந்தது. அப்போது சில்வா வீட்டில் இல்லை. காவலர்கள் சற்றுப் பிந்தி வருமாறு என்னைப் பணித்தனர். மறுநாள் நான் ஒரு சுவீடன் உல்லாசப் பிரயாணியையும் அழைத்துக் கொண்டு அவர்கள் இடத்துக்குச் சென்றேன்.

குரோணர்கள் இரண்டு பேருக்கான சிங்கப்பூர் எயார்லைன்ஸ் பயணச் சீட்டுக்கென்றும் 10,000 குரோணர்கள் அவர்களால் தீர்மானிக்கப்பட்ட ஹோட்டல் வாடகைக்கென்றும் பெறுமதியான ஒரு தொகை தனது அமைப்பான Mountlavinia Friendship Society Ltd. இற்கென்றும் கூறிஞர். வயதுவந்த குழந்தைகளை தத்தெடுக்கலாமா என்றும், 14வயது நிரம்பிய பெண்குழந்தை கிடைக்குமா என்றும் நான் வினவினேன். அதற்கு அவர் மிகவும் அலட்சியமாக "No

www.tamilarangam.net



problems" என்றார்.

என்னிடம் சுவீடனிலுள்ள சில்வாவுடன் இணைந்து வேலைசெய்யும் தத்தெடுக்கும் அமைப்பின் கடிதப் பிரதியுள்ளது. அதில் 6000 குரோணர்கள் சுவீடனிலுள்ள அமைப்புக்கு என்றும் 4000 குரோணர்கள் சில்வாவின் அமைப்புக்கு என்றும் 20,000 குரோணர்கள் கைச்செலவுக்கு என்றும் மொத்தம் 50,000 குரோணர்கள் ஒரு குழந்தையைத் தத்தெடுக்கச் செலவாகிறது.

ஒரு வருடங் கழித்து நான் சென்றுவந்த குழந்தைகள் மனையை சுவீடன் தொலைக் காட்சிப் பத்திரிகை துருவி ஆராயத் தொடங்கியது. அதன்மூலம் சில்வாவுக்கு சொந்தமாக ஒரு ஹோட்டல் உள்ளமையும் சொந்தமாய் ஒரு உணவு விடுதி (restaurant) உள்ளமையும் சொந்த போக்குவரத்து வசதிகள் உள்ளமையும் புலப்பட்டன. எல்லாப் பெற்றோர்களும் அவரது அடிமைகள் என்றும் தெரியவந்தது. சுவீடன் தொலைக்காட்சிப் பத்திரிகை அதை ஒரு அரசியல் நாடகம் என வர்ணித்திருந்தது.●

- நன்றி:- "Barn I Krig"

* இதுவரை பல தடவைகள் அரசாங்கம் அமைத்து செல்வாக்குப் பெற்றிருந்த இத்தாலிய இடதுசாரிக் கொம்யூனிஸ்ட் கட்சி கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களைத் தொடர்ந்து பெருமளவில் செல்வாக்கை இழந்துள்ளது. அண்மையில் நிகழ்ந்த கருத்துக் கணிப்பு ஒன்றில் இக்கட்சி 24% ஆதரவையே பெற்றுள்ளது. கிறிஸ்தவக் கட்சி 33% ஆதரவைக் கொண்டிருக்கிறது.●

தொகுப்பு: ஆர்.ஐ.ஜே.

## பாரதிதாசன் நூற்றாண்டு

பாரதியாருக்குப் பின்வந்த கவிஞர்களில் தனது காலத்தில் தமிழ் வளரப் பெரும் பங்காற்றிய பாரதிதாசன் (சுப்புரத்தினம்) பிறந்த நூற்றாண்டு சித்திரை மாதத்துடன் தொடங்கியுள்ளது.

திண்ணைப் பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை முடித்த பாரதிதாசன் பாண்டிச் சேரியில் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பயிற்சி பெற்று அக்கல்லூரியில் முதல்வராகத் தேறினார். பதினெட்டு வயதில் ஆசிரியப் பணி புரிய ஆரம்பித்த பாரதிதாசன் 37வருடங்கள்- ஓய்வு பெறும்வரை - அப் பணியில் நீடித்தார். வெறும் ஆசிரியராக மட்டுமே நின்றுவிடாது, தான் வாழும் சூழலில் ஒரு போராட்டக் காரனாக அவர் வாழ்ந்தார். அந்தச் சூழலில் அநீதியை எதிர்க்கும் ஒரு மனிதனாக அவர் இருந்தார். கல்வித் திட்டத்தில் உள்ள குறைகளை அவர் சாடினார். அவ்வாறான குறைகளை நீக்கவும் அவர் குரலெழுப்பினார். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பள்ளியில் சேர்க்க மறுக்கப்பட்ட போது அதைத் தீவிரமாக எதிர்த்து அவர்களையும் பள்ளியில் சேர்க்க உதவினார்.

பாரதியார் பாண்டிச்சேரியை விட்டு நீங்கும்வரை அவருடன் நெருங்கிய நண்பனாகவும், போராட்ட வாழ்வில் உற்ற தோழனாகவும் திகழ்ந்தார் பாரதிதாசன். பாரதியார்மீது அவர் கொண்டிருந்த அபிமானமும் மதிப்புமே சுப்புரத்தினம் என்ற அவரது பெயரை பாரதிதாசன் என மாற்றக் காரணமாயிருந்தது.

பாரதிதாசனின் நூற்றாண்டுக் காலப் பகுதியில் அவரது படைப்புகள் பரவலாக மக்களிடம் எடுத்துச் செல்லப் படுவதோடு அவரது படைப்புகளும், வாழ்வும் ஆய்வு செய்யப்படுவது அவசியமாகும். ●

- சித்தன் -

www.tamilarangam.net



'காய்கறி வாங்கக் காலையில் 'பிளாஸ்ரிக் பாக்'குடன் போன சந்திராவை இன்னும் காணேல்லை. ஆமிக்காரர் இப்ப இஞ்சாலுப் பக்கம் உலாத்துறேல்லை எண்டாலும்.... திடீரெண்டு வருவாங்கள். ஆர் கண்டது என்ன நேரத்திலை என்ன நடக்கும் எண்டு. சந்திரா அவள் புத்திக்காரி, மூத்தவளைப் போல இல்லை. சமாளிச்சுப் போட்டு வந்தாள். வைச்ச உலையும் ஆறப் போகுதெண்டு ஈஸ்வரி வேறை புறுபுறுக்கிறாள். என்னவென் நடக்கட்டும். இந்தப் பெடி ரகுநாதன் ஏதோ மண்டையைப் புடுங்கிக் கொண்டு படிக்குது. இந்திரா கிணத்தடியிலை. மகேசன் அவனுக்கென்ன சைக்கிளைக் கழட்டிறதும் பூட்டுறதும்.... அல்லாட்டிக் கண்ணாடிக்கு முன்னாலை நிண்டு கமக்கட்டை நெளிக்கிறது, வாலிபப் பெடி. உலகம் முன்னேறிக் கொண்டு போகுது. எனக்கென்ன குறை, கடவுளே எண்டு மூத்தவளுக்கு ஒரு கலியாணத்தைக் கட்டி வைச்சிட்டாக் காணும். மற்றதுகள் தன்தன் பிராக்கைப் பாக்குங்கள். மற்றதுகளின்ரை பிராக்கைப் பாக்க நான் இருக்கிறனே இல்லையோ ஆருக்கென்ன தெரியும்...?'

'ஈஸிச்சேயரில்' படுத்தபடி வேலுப்பிள்ளையரின் சிந்தனை இப்படி ஓடியது. வெளி விருந்தையில் நல்ல காத்துப் படும். வாழைத் தோட்டங்களை ஊடுருவி வரும் சோளகம் கொஞ்சம் கனதியாயினும் விருந்தையிலே படுத்திருக்கும் வேலுப்பிள்ளையருக்கு இதமாய்த் தானிருக்கும்.

ஈஸ்வரி வெளியிலை வந்து கதிரைக்குப் பக்கத்திலை மறந்துபோய் வைச்சுட்டுப் போன சுண்ணாம்புப் பேணியை எடுத்துக் கொண்டு உள்ளே குசினிக்குள் போனாள். 'இந்த மனிசன் இப்ப நல்லா வெத்திலை போடப் பழகியிருக்கு. சுண்ணாம்புப் பேணியுக்கை ஒண்டையுங் காணேல்லை' ஈஸ்வரி உள்ளுக்குள் திட்டினாள்.

'ஒருவேளை கலியாணம் பேசவந்த அருளண்ணைதான் அள்ளிக் கொண்டு போச்சுதோ ஆருக்குத் தெரியும். ஒவொரு மாப்பிள்ளையைப் பற்றிச் சொல்லேக்கையும் ஒரு கிளாஸ் தேத்தண்ணியும் ஒரு தட்டம் வெத்திலையும் முழுசா வேணும் அருளண்ணைக்கு. இவள் இந்திராவுக்கு இன்னும் விடியுதில்லை. வயது அவ்வளவு போகேல்லை எண்டாலும் அமையுதில்லை. பாப்பம். நடக்கிறது நடகட்டும்...'

ஈஸ்வரியின் சிந்தனையை "அம்மா... அண்ணை... ஐயோ... ஓடிப்போய்க் கொயிலடியிலை பாருங்கோ ..." என்ற சந்திராவின் அலறல் தடுத்தது.

"என்னடி என்ன நடந்தது"

எதுவுமே பேசாமல் பிளாஸ்ரிக் பாக்கைச்

அத்தியாயம் 6



சுழற்றி உள்ளே எறிந்துவிட்டு விறுந்தையில் தொப்பெனக் குந்தியவண்ணம் இரு கைகளாலும்தலையைப் பொத்தியபடி

உட்கார்ந்து விட்டாள்.
வேலுப்பிள்ளையர் பதறிப் போய் விட்டார். இவள் போட்ட சத்தத்திலை கிணத்தடியிலை நிண்ட இந்திராகூட அலறி அடிச்சுக் கொண்டு ஓடிவந்துவிட்டாள்.
ரகுநாதன் அவள் தலையைப் பிடிச்சு உலுக்கி "என்ன நடந்ததெண்டு சொல்லிப் போட்டு இரன்" என்றுன்,.
"அங்கை போய்க் கொயிலடியிலை பார் அண்ணை என்னுலை சொல்லேலாது" அவள் மீண்டும் மௌனமாளுள்.
ரகுநாதன் சேட்டைக் கொழுவிக் கொண்டு ஓடிஞன். ஓட்டமும் நடையுமாய்ச் சென்று கொண்டிருந்தான். தூரத்தில் அரச மரத்தடிக்குச் சற்றுத்தள்ளிக் கூட்டம் நின்று கொண்டிருந்தது. நெருங்க நெருங்க

ஏக்கம்,.. திகில்... குடிகொண்டது. எதிரே வருபவர்களிடம் விசாரிக்கத் துணிவில்லாமல்... கிட்ட நெருங்கிஞன். கூடி நின்ற கூட்டம் எதுவுமே பேசாமல் நின்றது அவனுக்கு மேலும் அதிர்ச்சியைக் கொடுத்தது. எந்த நேரமும் கூட்டம் ஓடுவதற்குத் தயாராய் இருப்பது போல் பட்டது. முன்பின் தெரியாத சனங்கள்கூட நிற்பது மாதிரித் தோன்றியது. கூட்டத்தை விலக்கி விலக்கி மையத்தை நோக்கிஞன்.
'லைற்போஸ்ற்'
கிழே–
விழிகள் பிதுங்கியபடி ...
மூளை சிதறுண்டு... இரத்தம் காய்ந்தபடி..
ஒரு கையின் பாதி எலும்பு மட்டும் தெரிய..
நிமிர்ந்து..பிரேதமாய்க் கிடப்பது
என் சுரேஸா..? இல்லை.
சுரேஸின் தம்பி கணேசானந்தன். நேற்றிரவு உறுமிய இராணுவ றக்கின் வெறியாட்டம். சுரேசைப் பிடிக்கவந்து ஒன்றும் அறியாத இந்தக் கணேசை லைற் போஸ்ரில்

அடித்துக் கொன்ற வெறியாட்டம்.
'தெரியாது' என்று சொன்ன பொய்க்குக் கிடைத்த தண்டனை இதுவெனில்..



'தெரியும்' என்று சொல்லும் உண்மைக்கு மன்னிப்பும் சொர்க்கமுமா கிடைக்கும்?
அறிந்ததும்... அறியாததும்.. பொய்யும்...

www.tamilarangam.net



உண்மையும்... உயிரே போனபின் ஆராய்ந்து என்ன லாபம்.
நான் இப்பொழுது என்ன செய்யலாம்? ஒருநாள் என்ரை சைக்கிளுக்குக்

காத்தடிச்சுத் தந்த இந்தச் சின்னக் கணேஸ்... ஒருநாள் நானும் சுரேசும் படம் பாக்கப் போகேக்கை.. களவாத் தியேட்டரிலை இருந்துகொண்டு 'அண்ணைக்குச் சொல்லாதைங்கோ' எண்ட இந்தக் கணேஸ்... கண்ணுக்கு முன்னலை.. துண்டு துண்டாய் ரத்த வெள்ளத்தில் கிடக்கிருன்.
'ரகு என்ரை வாழ்க்கையிலை குறுக்கிடாதை.. எண்டைக்கும் உன்ரை 'பிறண்ட்' சுரேஸ் 'பிறண்ட்'தான்' வாழைத் தோட்டத்துக்கை வைச்சு அவன் சொன்ன வசனம்.
'நானும் உன்ர பிறண்ட் தான்ராப்பா, நான் உனக்கிப்ப என்ன செய்யலாம், உன்னை எங்கை பாப்பன்.. பாத்தாலும் இந்தப் பச்சிளம் சாவைத் தாங்கு என்று எப்பிடி ஆறுதல் சொல்லுவன். சரி உனக்கு உதவுறது எண்டாலும் எப்பிடி?'
ரகுநாதன் மெதுவாக நடக்கத் தொடங்கினுன். மேற்சட்டைப் பொக்கற்றினுள் 5ரூபா இருக்கிறது என்ற எண்ணமும்... காப்போத்தல் சாராயத்தின் விலை 3ரூபா என்ற எண்ணமும் வந்தது.
( தொடரும்..)

---

# அரசியல் குடும்பம்

அண்மையில் நிக்கரகுவாவில் புதிய ஜனதிபதியாக அமெரிக்க சார்பு திருமதி வயோலெட்டா சமோரா பதவியேற்ருர். இதில் என்ன விகடமென்ருல் சமோராவின் கணவர் பெற்ரோரேகினோ முன்னுள் அமெரிக்க கைப்பொம்மைப் பாசிச அரசை எதிர்த்து ஆயுதமேந்திப் புரட்சி செய்தவர் என்பதாகும். இவர் 1979இல் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் இறப்பு நிக்கரகுவாப் புரட்சிக்கு புதிய உத்வேகமூட்டியது. இன்று இவர்களின் பிள்ளைகளும் இரண்டு முகாங்களாகப் பிளவுபட்டுள்ளனர். கார்லோஸ் பெர்ஞண்டோவும் கிளவ்டியும் ஆயுதமேந்திய 'சன்டினிஸ்டா' அரச ஆதரவாளர்களாவர். பெற்ரோ ஜோக்கினடும் கிறிஸ்ரியாஞவும் சன்டினிஸ்டாக்களுக்கு எதிரானவர்கள்.

சமோரா குடும்பத்தினர் இன்று இரண்டு பத்திரிகைகளை நடாத்துகின்றனர். ஒன்று சன்டினிஸ்ட பத்திரிகையான 'லா பரிக்கா'வும், மற்றது எதிர்க்கட்சிப் பத்திரிகையான 'லா பிறென்ஸா'வும் ஆகும். அரசியலில் இரண்டு துருவங்களாக இருக்கும் குடும்பத்தினர் தமது குடும்பவாழ்வில் அரசியலைக் கலப்பதில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் இன்று நிக்கரகுவா மிகுந்த உயிரிழப்புக்கும் தியாகங்களுக்கும் இடையே பெற்ற புரட்சியானது சன்டினிஸ்டாவின் சில தவருன நடவடிக்கைகளால் மீண்டும் அமெரிக்க பொறிக்குள் சிக்குண்டுள்ளது. சன்டினிஸ்டாவினர் தம்மை மீண்டும் சுயவிமர்சனத்துக்கு உட்படுத்தி தம்மை மீளமைக்கவேண்டிய நிலையிலுள்ளனர்.

சன்டினிஸ்டாக்களது தோல்வியிலிருந்து உலகெங்கிலுமுள்ள புரட்சியாளர்கள் படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

– சர்வன் –

www.tamilarangam.net



# புதிதாக வெளிவரும் உண்மை

- சினிப்பித்தன் -



பிளாட்டூன் திரைப்படத்தைத் தொடர்ந்து கடந்த மாதம் வெளியான 'Born 4th of July' திரைப்படம் மீண்டும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை காலமும் வெளியான அமெரிக்கப் படங்கள் வியட்நாமில் அமெரிக்காவின் கொடூரங்களை மூடிமறைத்தும், வியட்நாமிய புரட்சியாளர்கள் கொடூரம் நிறைந்தவர்கள் என்பதைப் பறைசாற்றியும், தாம் விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை என்பதுபோல் ரம்போ பாணியை மேற்கொண்டும் வெளிவந்தனவே ஒழிய வியட்நாமில் நடந்த உண்மைச் சம்பவத்தைச் சொல்லும் படங்களாக வெளிவரவில்லை. (ஒரு சில படங்களைத் தவிர) இவற்றில் சில வெளிவந்தவுடனேயே தோல்வியடைந்து படச்சுருள்களை பெட்டிக்குள் முடங்கிவிட்டன.

ஆனால் இவற்றையெல்லாம் மீறி வெளிவந்த பிளாட்டூன் திரைப்படம் மாபெரும் வெற்றியீட்டியதுடன் ஒஸ்கார் பரிசுகளையும் பெற்றுத் தந்தது. இதன் இயக்குநர் ஒலிவர் ஸ்ரோன் (இவரும் வியட்நாமியப் போரிலே பங்கேற்றவர்) இயக்கி வெளியிட்ட இன்னோர் திரைப்படந்தான் Born 4th of July. இப்படத்தின் கதை ஒருவரது உண்மையான கதையை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. (இது ஏற்கெனவே நூலாக வெளிவந்தது)

கிறீஸ்தவமத பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்த 'Kovik', உயர்தர மாணவனாக இருக்கும்போதே 'அமெரிக்க' தேசிய வெறியூட்டப்பட்டு பிறந்த தேசத்துக்காகச் சேவைசெய்வதாக நினைத்துக் கொண்டு கடற்படையில் சேர்கின்றான். பின் அவன் உலகின் எங்கோ ஒரு மூலையிலுள்ள வியட்நாமியர்களைக் கொல்ல அனுப்பப்படுகிறான். அங்கு கண்முன்னே அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைக் காண்கிறான். ஒருநாள் வியட்நாமிய புரட்சிவாதிகளுடன் ஏற்பட்ட மோதலிலே அவனுக்குக் காலிலும் நெஞ்சிலும் குண்டுகள் பாய்கின்றன. இதைத் தொடர்ந்து அவன் நடக்கமுடியாது ஊனமாகிறான். போருக்காகக் கோடி கோடியாகப் பணத்தைச் செலவழிக்கும் அமெரிக்க அரசு போரில்


www.tamilarangam.net



காயமுற்றவர்களுக்கு போதிய மருத்துவ வசதிகளைச் செய்துகொடுக்காத நிலையைக் காண்கிருன். நாடு திரும்பியதும் தான் சமூகத்துக்கும் குடும்பத்துக்கும் பாரமாக இருப்பதை உணர்கிருன். ஆனுலும் அவனுக்கு அமெரிக்க தேசியவெறி மங்கவில்லை. போரை நிறுத்தக் கோரி அமெரிக்காவிலே போராட்டங்கள் நடக்கின்றன. தனது தம்பியும் அதில் பங்கேற்றிருந்தது கண்டு அவன் கோபங் கொள்கிருன். தனது காதலியை மீண்டும் சந்திக்கிருன்; அவளும் போரை நிறுத்தக் கோரி போராடுபவளாக இருப்பதை அறிகிருன். போரை நிறுத்தக் கோரி போராடுபவர்களை அமெரிக்க பொலீஸ் ஈவிரக்கமின்றித் தாக்குகிறது. Kovikஉம் பொலீசிடம் அடிவேண்டுகிருன். தொடர்ச்சியாக ஆயிரக் கணக்கான அமெரிக்கர்கள் இறப்பதையும் ஊனமுறுவதையும் அறிகிருன், உண்மைநிலையை அறிந்து போரை நிறுத்தக் கோரிப் போராடுகிருன்.

இதுதான் படத்தின் கதை. இப்படம் விறுவிறுப்பாக இயக்கப்பட்டதுடன் எம்மை 60ஆம் 70ஆம் ஆண்டுகளுக்கு இட்டுச் செல்கிறது. மறைக்கப்பட்ட உண்மை பலஆண்டுகள் கழித்தும் வெளிவருவது தவிர்க்க முடியாததாகிறது.

இதன் கதாநாயகனை Kovik அமெரிக்க தேசியதினமான யூலை 4ஆந்திகதி பிறந்தவன். படத்தின் பெயரும் இதுவே; பொருத்தமான தலைப்புத்தான். இதன் இயக்குநர் ஒலிவர் ஸ்ரோன் தன் கருத்திலே, தன்கண்முன்னே நாட்டில் நடந்த விடயங்களைச் சொல்லவே இப்படத்தை எடுத்ததாகக் குறிப்பிடுகிருர். இப்போரிலே ஏறத்தாழ 60,000 அமெரிக்கவீரர்கள் இறந்தும் இலட்சக்கணக்கானேர் ஊனமுற்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இவ்வருடம் ஏப்பிரல் மாதம் 22ஆந் திகதியுடன் பூமித்தாய்க்கு 20வருட பிறந்ததினம் கொண்டாடப்பட்டது. இது முதன்முதல் அமெரிக்காவில் 20வருடங்களுக்குமுன் தொடங்கப்பட்டது. இன்று புதிய சூழல் பாதுகாப்பு அமைப்பினரால் மிகவும் ஆவலோடு இவ்விழா நடாத்தப்படுகிறது. கிட்டத்தட்ட 150நாடுகளில் பூமித்தாய்க்கு பிறந்ததினம் கொண்டாடப்படுகிறது. இரசாயனப் பொருட்களால் அழுக்கடைந்து நோய்வாய்ப் பட்டுப்போன பூமித்தாயை எப்போது அதிலிருந்து மீட்டெடுக்கப் போகிருேம்?

– உலகன் –

ஏப்பிரல் 23ஆந் திகதியுடன் ஐ.நா.சபையின் 160ஆவது அங்கத்துவ நாடாக நமீபியா மிளிர்கிறது. நமீபியத் தேசியக்கொடி ஐ.நா.தலைமையகத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது. பெரிய தேசமான நமீபியா ஐ.நா. நிதிக்கு மிகச் சிறிய தொகையையே செலுத்துகிறது. இது ஐ.நா. நிதியத்தின் 0.01%ஆகும். இத்தொகை வருடத்துக்கு 80,000 டொலர்களாகும்.

• நிநன்.

www.tamilarangam.net

முகவரி மாற்றத்தைக் கவனிக்கவும்

* இலங்கை உணவுப் பொருட்கள் யாவற்றையும் மலிவாகப் பெற்றுக் கொள்ள ஒஸ்லோ வாழ் தமிழர்கள் நாடும் இடம்

* நோர்வேயின் சகல பகுதிக்கும் தேவையான பொருட்களைத் தபால் மூலம் அனுப்பி வைக்கிறோம். உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**எப்பகுதிக்கும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.**

புதிய முகவரியில் உங்கள் அபிமானத்துக்குரிய

# CEYLON MAT A.S

SKIPPERS GATA 30, 0154.OSLO.1. T.P:332619

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றைய TOYEN KRO
இன்றைய DARBAR

அன்றும் அதே சுவை
இன்றும் அதே சுவை

# INDISK & VEGETAR MAT

## DARBAR

**MAT OG VINHUS**

**INDISK MAT PÅ DET BESTE**
**SPENNENDE VEGETAR-RETTER**
**TANDOORI RETTER**
**PIZZA**

**Rimelige priser**

**TILBUD!**

Mon–Fre....Til 20.00 )
HAPPY HOUR RIMELIGE DRIKKER.
**Indisk middag Kr.** KR.59
Lor–Son....Til 20.00
**Indisk buffet KUN Kr. 89.-**

**Åpent alle dager kl. 16.00 - 23.00**
**Smedgt. 49, (Ing. Jens Bjelkesgt.) Oslo 6**
**(3 Min. gange fra Tøyen T-banest.)**
**Tlf. 67 47 04**
**GOD PARKERING ● TAKE AWAY**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்